27
JAN 1939
MADRAS

Regd. No. M. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

மலர் 9

செந்தமிழ் மாத சஞ்சிகை

இதழ் 12

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1357, ஷவ்வால் மீ
1938ஞ டிசம்பர்மீ

1. அல் குர்ஆன் ... 337
2. அல்ஹதீது ... 340
3. நம்மவரின் அசிரத்தை ... 343
4. நாயகம் (ஸல்.) அவர்களுக்குப் பிறகு மக்காவில் நிகழ்ந்ததென்ன? ... 347
5. சன்மார்க்கத்தின் முக்கிய கொள்கை ... 349
6. கமால் பாஷா ஆக்கிய நவீனத் துருக்கி ... 352
7. ஆரோக்கியத்துக்குரிய தூக்கம் ... 357
8. பிரபஞ்ச அதிசயங்கள் ... 359
9. துருக்கி வாழ்க ... 362
10. பலஸ்தீன் அரபியர் விசாரம் ... 364
11. இஸ்லாமியப் போதனையின் மகிமை ... 365
12. தா. இ-வின் தவறான கூற்று ... 368

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. S. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, ஸிலோன், பர்மா முதலிய உள் நாடுகளுக்கு	...	ரூபா	3 0 0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு		,,	4 0 0
தனிப் பிரதி	...	,,	0 4 0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக் கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

43, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3rd JAN 1939
MADRAS

சென்னை-600 008

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். (குர்ஆன்)

ஆசிரியர் :—மௌலவி A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 9	ஹிஜ்ரி 1357 ஷவ்வால் மீ 1938ஹு டிசம்பர் மீ	இதழ் 12

அல் குர்ஆன்

ஜனங்களே! நிச்சயமாக நான் உங்கள் யாவருக்கும் அல்லாஹ்வால் அனுப்பப்பட்டவன் என்று நீர் கூறுவீராக. (அல்லாஹ்வாகிய) அவன்! அவனுக்குத்தான் வானங்களி னுடையவும் பூமியினுடையவும் ஆட்சி யிருக்கிறது; அவனைத்தவிர வணக்கத்திற்குரியவன் (வேறு யாரும்) இல்லை. அவன் ஜீவிக்கச் செய்கிறான். இன்னும் மரிக்கச் செய்கிறான். ஆகவே, அல்லாஹ்வையும், உம்மி நபியாகிய அவனது ரஸூலையும் விசுவாசியுங்கள். அவர் அல்லாஹ்வையும் அவனது வார்த்தைகளையும் விசுவாசிக்கிறார். இன்னும் நீங்கள் நேர்வழி பெறும் பொருட்டு அவரைப் பின்பற்றுங்கள். (திரு குர் ஆன்,)

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் மனு ஜின் ஆகிய இரு வர்க்கத்தினர் அனைவருக்கும் கியாமத்து நாள்வரையில் றஸூலாக இருக்கிறார்கள்; அவர்களைப் பின்பற்ற வேண்டும் என்ற விபரம் இந்த ஆயத்துகளில் கூறப்பட்டிருக்கிறது. ஏனைய றஸூல்மார்கள் மனு ஜின் ஆகிய இரு வர்க்கத்தினருக்கும் றஸூலாக இருக்கவுமில்லை; கியாமத்து நாள்வரைக்கும் றஸூலாக இருக்கவுமில்லை. ஹஜ்றத் சுலைமான் (அலை.) அவர்களுக்கு ஜின்கள் கீழ்ப்படிந்து ஊழியம் செய்தன. ஆதலின், ஜின்களுக்கும் அவர்கள் நபியாக இருந்தார்கள் என்று சிலர் நினைக்கக்கூடும். ஹஜ்றத் சுலைமான் (அலை.) அவர்கள் ஜின்களுக்கு நபியாக அனுப்பப்படவுமில்லை, அவர்களிடம் அவர்கள் இஸ்லாமியப் பிரசாரம் புரியவுமில்லை. ஆனால், அவர்கள் ஜின்களிடம் வேலை வாங்கினார்களென்பதும் அவர்களது கட்டளைக்கு ஜின்கள் கீழ்ப்படிந்தனவென்பதும் மெய். ஆனால், ஜின்கள் தங்கள் குப்ரின்பேரில் ஸ்திரமாக இருந்துகொண்டு அவர்களுக்கு ஊழியம் செய்தன. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு அப்படி இல்லை. ஜின்கள் திரு குர்ஆனைச் செவிமடுத்து ஈமான் கொண்ட விபரம் இத்திருமறையின் வேறொரு இடத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. தவிரவும், இந்த ஆயத்தில் "உங்கள் பால்" என்ற வார்த்தைகளிலுள்ள "உங்கள்" என்ற பதம் மனுஜின் ஆகிய இரு வர்க்கத்தினரையும்

சுட்டிக் காட்டுகிறது. அப்புறம் அனைவருக்கும் என்ற பதம் கியாமத்துநாள் வரையிலுள்ள யாவரையும் அறிவிக்கிறது.

"அவனுக்குத்தான் வானங்களினுடையவும் பூமியினுடையவும் ஆட்சி இருக்கிறது" என்ற வாக்கியம் அல்லாஹுத ஆலாவின் தன்மையை விளக்கிக் காட்டுவதுடன், அவனைத்தவிர வேறு யாரும் வணக்கத்திற்குத் தகுதி இல்லை என்பதையும் அறிவிக்கிறது. தவிரவும், "அவன் ஜீவிக்கச் செய்கிறான்; இன்னும் மரிக்கச் செய்கிறான்" என்ற வாக்கியங்கள் அவனது தெய்வீகத் தன்மையையும், வணக்கத்திற்கு அவன்தான் உரியவன், வேறு யாரும் அதற்குத் தகுதியாயில்லை என்ற விஷயங்களையும் அறிவிக்கின்றன. ஏனெனில், உலகில் எவருக்கும் இவ்விரு சக்திகளும் கிடையாது. அல்லாஹுத ஆலாவினாலளிக்கப்பட்ட ஸ்தூல பலத்தைக் கொண்டு மனிதர்கள் பல அரும் காரியங்களைச் செய்துகொள்ள முடியும். ஆனாலும், ஒருவரை ஜீவித்திருக்கச் செய்யவோ, மரிக்கச் செய்யவோ அவன் ஒருவனைத் தவிர வேறு யாருக்கும் சக்தி இல்லை.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் அல்லாஹ்வின் ரஸூல் என்பதையும், அல்லாஹுத்த ஆலா தான் ஜீவிக்கச் செய்பவனாகவும், மரிக்கச் செய்பவனாகவும், வானம் பூமி ஆகியவைகளின் ஆட்சிக்கு உரியவனாகவும் இருப்பதால் அவன் தான் வணங்கப்படத் தகுந்தவனாக இருக்கிறான் என்ற விவரத்தையும் கூறியபின், அவனையும் அவனது ரஸூலையும் விசுவாசிக்க வேண்டும் என்றும், அவனது ரஸூலைப் பின்பற்ற வேண்டும் என்றும் மனுஜின் ஆகிய இரு வர்க்கத்தாரும் கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள். அவ்வாறு நாயகம் (ஸல்.) அவர்களைப் பின்பற்றினால்தான் நேர்வழியை அடைய முடியும் என்றும் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. மேலும், இந்த ஆயத்தில் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுடைய மூன்று தன்மைகள் அதாவது நபியாக இருத்தல், உம்மியாக இருத்தல், அல்லாஹ்வையும் அவனது வார்த்தைகளையும் விசுவாசிப்பவராக இருத்தல் ஆகியவைகள் கூறப்பட்டிருக்கின்றன.

"நபி" என்ற பதத்திற்கு "அறிவிப்பவர்" என்பது பொருள். "உம்மீ" என்ற பதத்திற்கு "படிக்கவும் எழுதவும் தெரியாதவர்" என்பது பொருள். இது நமது நாயகம் (ஸல்.) அவர்கள் அல்லாஹுத ஆலாவின் தூதர் என்பதற்கு நித்திய சாக்ஷியாகும். எழுதப் படிக்கத் தெரிந்த ஒருவர் தம்மை அல்லாஹ்வின் ரஸூல் என்று கூறுவாராயின் அவர் தமது கல்வித் திறமையால் அவ்வாறு கூறிக்கொள்கிறார் என்றும், தம்முடைய சாமர்த்தியத்தால் திரு குர்ஆனைச் சுயமாக இயற்றிக்கொண்டார் என்றும் பிறர் சொல்ல இடமுண்டு. ஆனால், எழுதவும் படிக்கவும் தெரியாத ஒருவர் மனிதராலும் மற்றவராலும் சொல்ல முடியாத சொன்னயமும் பொருள் பொலிவுமுள்ள திரு குர்ஆனை மக்களுக்கு அறிவிப்பது பெரிய அற்புதமாகும்.

தவிர, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் அல்லாஹ்வையும் அவனது வார்த்தைகளையும் அதாவது தமக்கு இறைவனாலருளப்பட்ட திரு குர்ஆனையும், ஏனைய நபிமார்களுக் கருளப்பட்ட வேதங்கள் ஸுஹுபுகள் முதலியவற்றையும் ஈமான் கொண்டிருக்கிறார்கள் என்பதிலிருந்து, அல்லாஹுத ஆலாவின் மீது ஒருவர் ஈமான் கொள்வதாக இருந்தால், அவனது வார்த்தைகளாகிய வேதங்களையும் ஈமான் கொள்ள வேண்டும், அல்லாஹ்வின் வார்த்தைகளாகிய வேதங்களை விசுவாசிக்காமல் அவனை விசுவாசிப்பது உண்மையான விசுவாசமல்ல என்பதை அறிவிக்கிறது.

தவிர, எஹூதிகளும் கிறிஸ்துவரும், அல்லாஹுத்த ஆலா ஒருவன் என்பதையும், அவனையே வணங்க வேண்டும் என்பதையும் ஒப்புக்கொள்வர். என்றாலும், அவனது வார்த்தைகளை கிரியாம்சையில் விசுவாசிப்பதில்லை. தனக்கு மனைவி, மக்கள் இல்லை என்று அவன் கூறி இருப்பதைப் புறக்கணித்து விட்டு அவனுக்குப் புதல்வர் இருப்பதாகவே கருதுகின்றனர். அவனது நபிமார்களுக்கு எவ்வளவு மதிப்புக் கொடுக்க வேண்டுமோ அவ்வளவு மதிப்பைக் கொடுக்காமல் சிலரை உயர்த்தியும் சிலரைத் தாழ்த்தியும் அவர்களுக்கிடையில் வித்தியாசத்தை ஏற்படுத்தி இருக்கின்றனர். ஆகவே, இவ்வித வித்தியாசங்களைச் செய்துகொண்டிருப்பது உண்மை ஈமான் அல்ல என்பதையும் அறிவிக்கிறது.

இறுதியாக, "நீங்கள் நேர்வழி பெறும் பொருட்டு அவரைப் பின்பற்றுங்கள்" என்று இறைவன் கூறி இருப்பதை நம்மவர் கவனிக்க வேண்டும். அல்லாஹ்வையும் அவனது ரஸூலையும் விசுவாசிப்பதாக நாவாலுரைப்பது மட்டிலும் போதாது. நாவாலுரைப்பதுடன், ரஸூ

லைப் பின்பற்றவும் வேண்டும். அவ்வாறு பின்பற்றினால் தான் நேர்வழியை அடைய முடியும். இதனைக் குறித்து ஹஜ்ரத் ஜுனைதுல் பக்தாதி அவர்கள், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது அடிச்சுவட்டைப் பற்றிக்கொண்டு, அவர்களது 'சுன்னத்' என்னும் வழியைப் பின்பற்றி, அவர்கள் காட்டிய வழியைக் கடைப்பிடித்தவருக் கல்லாமல், மற்றைய எல்லா சிருஷ்டிகளுக்கும் எல்லாப் பாதைகளும் அடைக்கப்பட் டிருக்கின்றன, ஏனெனில், நன்மையான பாதைகள் யாவும் நாயகம் (ஸல்) அவர்களுக்கும், அவர்களது அடிச் சுவட்டில் செல்பவர்களுக்கும், அவர்களது சுன்னத்தைப் பின்பற்றுபவர்களுக்கும் மட்டிலுமே திறக்கப்பட்டிருக்கின்றன'' என்றுகூறி இருக்கிறார்கள்.

அஷ்ஷெய்குல் ஆரிப் முஹிய்யுத் தீனிப்னுல் அறபிய்யி அவர்கள், சுன்னத்தையும் சுன்னத்தைப் பின்பற்றுபவர்களையும் பற்றி விபரித்துக் கூறுகையில், ''மனிதன் ஷரீ அத்தின் கட்டளைப்படி மூன்று வகையில் ஏதேனும் ஒரு வகையைச் சேர்ந்தவனாக இருப்பான். (1) புறக் காரியங்களில் எதையும் லக்ஷியம் செய்யாமல், அகக்காரியங்களை மட்டிலும் கவனிப்பவனாக இருக்க முடியும். இப்படி இருப்பது ஷரீஅத்தின் சட்டங்களைப் பிரயோஜன மற்றவைகளாக்குவதாகவும், அவைகளைப் புறட்டுவதாகவும் இருக்கிறது. மார்க்கத்தின் சட்டங்களில் ஏதேனும் ஒரு சட்டத்தை அல்லது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது சுன்னத்துகளில் ஏதேனும் ஒன்றை-அது உண்ணல், குடித்தல் போன்ற பழக்க வழக்கத்தைச் சேர்ந்திருந்தாலும் சரியே—அவைகளில் ஒன்றை இடிப்பதானது பழிக்கத்தக்க காரியமாகும். இறைவன் நம்மையும் உங்களையும் இதனைவிட்டுக் காப்பானாக. (2) அகக் காரியங்களைக் கொஞ்சமும் லக்ஷியம் செய்யாமல் புறக் காரியங்களை மட்டிலும் கவனிப்பவனாக இருப்பான். இப்படி இருப்பது கொள்கை சம்பந்தப்பட்டவரை அல்லாஹுத ஆலாவிற்கு உருவத்தை உற்பத்தி செய்வதில் கொண்டுபோய்விடும். அல்லது உலக ஆசையின் காரணமாக 'ஆலமுல் மலக்கூத்'தைப் பார்க்க முடியாமல் மறைக்கப்பட்டுள்ள கல்விகளைக் கற்றுள்ள புக்கஹாக்களில் எவரையேனும் நம்புபவனாக இருப்பான். இப்படிப் பட்டவன் ஒரு பக்கீஹுடைய மதஹபின்படி நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது சுன்னத்துகள் என்று ஏதேனும் ஒரு சுன்னத்தைச் செவியேற்றால், அந்த சுன்னத்திற்கு ஆதாரமாக ஆயிரம் ஹதீதுகளைச் சாக்ஷியாகக் கொண்டு வந்தாலும் அவைகளை அங்கீகரிக்காமல், அந்த சுன்னத்தைப் பின்பற்றி நடப்பதை விட்டுவிடுவான். போதாததற்கு, தனக்கு நம்பிக்கையான பக்கீஹ் அதைச் சொல்லவில்லை என்பதற்காக அவன் 'முத்த கத்திமீன்'களான பெரியார்களின் ரிவாயத்துகளைப்பற்றித் தவறான உணர்ச்சியையும் உண்டாக்கிவிடுவான். இப்படி இருப்பதும் பழிக்கத்தக்க காரியமே யாகும். இவ்விதமான கூட்டத்தில் நம்மையும் உங்களையும் சேர்க்காமல் இறைவன் காப்பாற்றுவானாக. (3) ஷரீஅத்துடன் நடப்பவனாக இருப்பான். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் எங்கு நின்றார்களோ அங்கு நிற்பவனாகவும், எங்கு நடந்தார்களோ அங்கு நடப்பவனாகவும் இருப்பான். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது வணக்கங்கள்; பழக்க வழக்கங்கள் முதலிய யாவற்றையும் தவறவிடாமல் செய்பவனாக இருப்பான். இப்படியுள்ளவன் தான் நடுவழியில் இருப்பவன். இவ்வழிதான் சுன்னத். இதனைப் பற்றிப்பிடித்துக் கொள்பவன் தான் சுன்னி. அதாவது சுன்னத்தைப் பின்பற்றுபவன்.'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்பெரியார் அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது சுன்னத்தைப் பின்பற்றுவது சம்பந்தமாக ஒரு ஹிக்காயத்துச் சொல்லப்படுகிறது. அதாவது, ''நான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களிடமிருந்து வெளியான சகலத்தையும் பின்பற்றினேன். ஆனால், ஒன்றைமட்டும் பின்பற்ற என்னால் முடியவில்லை. அதாவது நாயகம் (ஸல்.) அவர்கள் ஹஜ்றத் அலீ (றலி.) அவர்களுக்குத் தமது புதல்வியை விவாகம் செய்து கொடுத்தார்கள். நானும் அம்மாதிரி செய்வதற்கு எனக்குப் பெண் குழந்தை இல்லை என்று ஷெய்குல் அக்பர் முஹிய்யுத்தீனிப்னுல் அறபி (றஹ்) அவர்கள் கூறி இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

ஒருமுறை சுல்தானுல் ஆரிபீன் அபூயஸீதில் புஸ்தாமி (றஹ்.) அவர்கள் தமது தோழர்களை நோக்கி, ''வாருங்கள், தனக்கு 'விலாயத்து' இருப்பதாகப் பிரபல்யப் படுத்திக் கொண்டிருக்கிற அந்த மனிதரைப்பார்த்து விட்டு வரலாம்'' என்று கூறி, அவர்களை அழைத்துக் கொண்டு ஒருவரைப் பார்க்கச்சென்றார்கள். அவர்கள் யாவரும் அம்மனிதர் இருக்குமிடம் சென்றார்கள். அதுபோழ்து அவர் மஸ்ஜிதுக்குச் செல்லப்புறப்பட்டுக் கொண்டிருந்தபோது

அம்மனிதர் கிப்லாவின் பக்கமாக எச்சில் துப்பினர். இதனை ஷெய்கு அபூயஜீத் புஸ்தாமீ (றஹ்.) அவர்கள் பார்த்தவுடன், அவருக்கு சலாமும் சொல்லவில்லை; அவருடன் முஸாபஹாச் செய்யவுமில்லை. பேசாமல் திரும்பித் தமதிருப்பிடத்திற்குச் சென்று விட்டார்கள். அப்புறம் ஷெய்கு அவர்கள் இம்மாதிரி நடந்து கொண்டதைக் குறித்து விசாரித்தபோது "நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் பேணி நடந்து வந்த அதபுகளாகிய மரியாதைகளில் ஒன்றை அவர் பேணவில்லை; அப்படி இருக்க அவர் ஒலிமார்கள், ஸித்தீக்குகளது அந்தஸ்துகளைப் பேணி நடப்பவர் என்று எவ்வாறு நம்ப முடியும்?" என்று கூறினார்கள்.

மெஞ்ஞானிகளான ஆரிபுகள் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது சுன்னத்தைப் பேணும் விஷயத்திலும், நாயகம் (ஸல்.) அவர்களைப்பின்பற்றும் விஷயத்திலும் எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தார்கள் என்பது மேற்கண்ட இரு ஹிக்காயத்திலிருந்தும் நன்கு தெரியவரும். ஆகவே, நாம் நாயகம் (ஸல்.) அவர்களது உம்மத்துமார்களில் ஒருவரைப் பின்பற்றுவதாக இருந்தால், அவர் பிரபலமடைந்திருக்கிறார்; ஜனங்கள் அவருக்கு மரியாதை செய்கிறார் என்பதை மட்டிலும் கவனித்துப் பின்பற்றக் கூடாது: முதலாவதாக அவர் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைஎவ்வளவுக்குப்பின்பற்றுகிறார் என்பதை நிறுத்துப் பார்த்த பிறகுதான் பின்பற்றவேண்டும். ஆகவே, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைப் பின்பற்றி நடப்பவர்களது கூட்டத்தில் அல்லாஹ் நம்மனைவர்களையும் சேர்ப்பானாக. ஆமீன்.

அல் ஹதீது

ஒவ்வோரு உம்மத்துக்கும் ஒரு 'பித்னா' இருக்கிறது. என்னுடைய உம்மத்திற்கு பித்னா பொருள்தான். (ஹதீது)

இந்த ஹதீதில் சொல்லப்பட்ட "பித்னா" என்ற பதத்திற்குக் கலகம், பிளவு, வீழ்ச்சி, மார்க்க பக்தி யின்மை, சோதனை, பரீக்ஷை என்பனபோன்ற பல பொருள்களுண்டு. அல்லாஹுதஆலா இக்குவலயத்தில் அனுப்பிய நபிமார்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களைப் பின்பற்றிய சமூகத்தார் இருந்து வந்தனர். அச்சமூகங்கள் இப்பொழுது அழிந்து விட்டன. கிறிஸ்துவர்கள் ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்களது உம்மத்துமார்கள் என்றும், எஹூதிகள் ஹஜ்றத் மூஸா (அலை.) அவர்களது உம்மத்து மார்களென்றும் சொல்லிக் கொள்ளப் படுகிறது. ஆனால், தற்போதுள்ள கிறிஸ்துவர்களும் எஹூதிகளும் அந்த நபிமார்களது உம்மத்துமார்களல்ல. இவர்களெல்லோரும் முஷ்ரிக்குகள். ஏனெனில், இவர்கள் ஹஜ்றத் மூஸா (அலை.) அவர்களது கட்டளையை மதித்து நடப்பவர்களுமல்ல; அவர்களுக்கு அருளப்பட்ட வேதமாகிய தௌராத்தின் கட்டளைப் படி நடப்பவர்களுமல்ல. கிறிஸ்துவர்கள் ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்களது கட்டளையையோ, இஞ்ஜீல் வேதத்தையோ பின்பற்றுபவர்களல்லர்; உண்மையாகவே எஹூதிகள் ஹஜ்றத் மூஸா (அலை.) அவர்களையும் தௌராத்தையும் பின்பற்றுபவர்களாக இருந்தால் ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்களை மதிக்காமலும், இஞ்ஜீல் வேதத்தை அங்கீகரிக்காமலும் இருக்கமுடியாது. ஆகவே, எஹூதிகள் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் பிறப்பதற்கு முன்னதாகவே காபிர்களாகிவிட்டனர். இதுபோலவே ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்களையும் இஞ்ஜீல் வேதத்தையும் கிறிஸ்துவர்கள் பின்பற்றுபவர்களாக இருந்தால் திரு குர்ஆனையும் நபிகள் நாயகம் ஸல்.) அவர்களையும் நிராகரிக்க மாட்டார்கள். ஆகவே, எஹூதிகளும், கிறிஸ்துவர்களும் நமது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களையும் திரு குர்ஆனையும் இப்பொழுதும் பின்பற்றாமல் இருந்துவருவதால், அவர்கள் தங்கள் வேதத்தையும், தங்கள் நபியையும் நிராகரித்தவர்களாகி விடுகின்றனர். அத்துடன் எஹூதியர் ஹஜ்றத் உஜைர் நபி (அலை.) அவர்களை அல்லாஹுத ஆலாவின் புதல்வர் என்று கருதுவதாலும், கிறிஸ்துவர்கள் ஹஜறத் ஈஸா (அலை.) அவர்களை அவனது புதல்வர் என்று கருதுவதாலும், அல்லாஹுத

ஆலாவிற்கு நமக்கிருப்பதுபோன்ற மனைவி மக்களிருக்கிறார்களென்றும், நமக்கு மனைவிமக்கள் பால் தேவை இருப்பதுபோல அவனுக்கும் தேவை இருக்கிறதென்றும் கருதுவதாக ஏற்படுகிறது. இப்படிக் கருதுவது ஷிர்க்காகும். ஆகவே, இக்காலத்திலுள்ள இவர்கள் முஷ்ரிக்குகள் தாம். என்றாலும், எஹூதிகள் தங்களை ஹஜ்ரத் மூஸா (அலை.) அவர்களுடைய உம்மத்து என்று கூறிக்கொள்வதாலும், கிறிஸ்துவர்கள் தங்களை ஹஜ்ரத் ஈஸா (அலை.) அவர்களது உம்மத்து என்று கூறிக்கொள்வதாலும், அவர்களை விவாதத்திற்காக அந்த நபிமார்களது உம்மத்துகள் என்று நாம் கூறலாம். இவர்களுக்குள் பித்னா உண்டாகி இவர்கள் பல்வேறு கக்ஷியினராக ஆனதையும், ஈமானை இழந்ததையும் குறித்து இப்பொழுது நாம் விவாதிப்பதாக இல்லை. ஆதலால், இம்மட்டுடன் இதனை நிறுத்திக்கொண்டு, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது உம்மத்துமார்களாகிய நம்மைக் குறித்துக் கவனிப்போம்.

ஏழைகள் தாம் ஆதியில் அதிகமாக இஸ்லாம் மதத்தைத் தழுவினர். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை ஆரம்பத்தில் எதிர்த்தவர்களிற் பெரும்பாலர் பணக்காரர்களே யாவர். இவர்களது தூண்டுதல்களால்தான் இஸ்லாமிய விரோதிகள் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களிடம் யுத்தத்திற்குச் சென்றனர். அப்புறம் குலபாயே ராஷிதீன்கள் காலத்தில் நிகழ்ந்த பல யுத்தங்களும் பணக்காரர்களது தூண்டுதலின் பேரில்தான் நிகழ்ந்தன. கிஸ்ரா, கைஸர் ஆகிய சக்கிரவர்த்திகளைத் தூண்டிவிட்டு இஸ்லாத்தை அழித்துவிடவே விரும்பினர். அக்காலத்தில் நடைபெற்ற யுத்தங்களெல்லாம் பணக்காரர்களது தூண்டுதலின் பேரில்தான் என்பதற்கு 'அந்தாக்கிய்யா'வில் கைஸர் சக்கிரவர்த்தி தனது தர்பாரைக்கூட்டி முஸ்லிம்களது யுத்த சம்பந்தமாகச் செய்த பிரசங்கமும், அவருடைய சேனாதிபதிகள் ஹிம்மஸ், 'யர்மூக்'போன்ற இடங்களில் முஸ்லிம் தூதுவர்களிடம் பேசிய நீதியும், இராக் யுத்தத்தில் கிஸ்ராவின் சேனாதிபதியான ருஸ்தம் என்பவன் காதிஸிய்யா என்ற ஸ்தலத்தில் முஸ்லிம் தூதுவர்களுக்குக் கூறிய வார்த்தைகளும் இதற்கு சாக்ஷிகளாக இருக்கின்றன. இக்காலத்திலெல்லாம் முஸ்லிம்களிடம் பண ஆசை ஏற்பட்டு விடவில்லை. அல்லாஹ்வினுடையவும், ரஸூலுடையவும் சட்டங்களை நிறைவேற்றுவது ஒன்றுதான் தங்கள் லக்ஷியம் எனக்கருதி வந்தனர். ஹஜ்ரத் உமர்பாறூக் (ரலி.) அவர்கள் கலீபாவாக இருந்தபோது முஸ்லிம்கள் எதிரிகளை ஜெயித்துப் புதுப்புது தேசங்களைக் கைப்பற்றி அப்புறம் படையெடுத்துச் செல்ல உத்திரவு கேட்டபோதெல்லாம் கலீபா அவர்கள் வெற்றிச் செய்தியைக்கேட்டுச் சந்தோஷங்கொள்வதில்லை. "முஸ்லிம்களுக்கும் பகைவர்களுக்குமிடையில் நெருப்பினாலான பெரிய வேலி குறுக்கே ஏற்பட்டு, முஸ்லிம்கள் மீது பகைவர்கள் அக்கிரமிக்கவும் பகைவர்கள் மீது முஸ்லிம்கள் அக்கிரமிக்கவும் இடமில்லாமற் போய்விடக்கூடாதா?" என்றே பிரார்த்திப்பார்கள். முஸ்லிம் சிப்பாய்கள் பணக்காரர்கள் அணியும் நேர்த்தியான உடைகளை அணியவோ, மாடமாளிகைகளைக் கட்டிக்கொண்டு குடியிருக்கவோ கூடாதென்று தாக்கீது செய்திருந்தார்கள். இதற்குக் காரணம் இவ்விதமான உடைகளாலும் வீடுகளாலும் இவ்வுலகத்தைய பொருள்கள்மீது பற்றுண்டாகி, போர்க்களத்தில் வீரதீரத்துடன் பகைவர்களை எதிர்க்க மனமில்லாமல் கோழையர்களாகிவிடுவார்கள் என்றும் கலீபா அவர்கள் கூறி வந்தார்கள்.

முஸ்லிம்கள் ஏழைகளாக இருந்தபோது முஸ்லிம்களுக்கு எங்கும் வெற்றியே கிடைத்து வந்தது. அவர்களுள் ஒற்றுமையுமிருந்து வந்தது. ஒருவரை ஒருவர் மதிப்பவர்களாகவும் இருந்து வந்தனர். ஆனால், முஸ்லிம்கள் தேசாதிபதிகளாகி, லக்ஷக்கணக்கான பொருள்களுக்கு உடமையஸ்தர்களான பிறகுதான் முஸ்லிம்களுக்கிடையில் ஒற்றுமை குன்றி, வேற்றுமையுண்டாகி பகைவர்களுக்கு இடங்கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதற்கு உதாரணங்கூறுவதற்கு நாம் வெகுதூரம் செல்லவேண்டியதில்லை. இந்தியாவில் முஸ்லிம்களது ஆட்சி இருந்தபோது அவர்களிடம் யுத்தக்கருவிகளுக்கும், போர்ச் சாதனங்களுக்கும் படை வீரர்களுக்கும் பஞ்சமிருக்கவில்லை. என்றாலும், அரச குடும்பத்தினருக்குள் அரசனாக வேண்டும், இந்தியாவிலுள்ள ஆட்சிக்கு அதிபதியாக வேண்டும் என்ற உணர்ச்சியால் ஒருவரோடொருவர் சண்டை போட்டுக்கொண்டனர். உடன்பிறந்த சகோதரர்களைக் கொலை செய்துவிட்டு ராஜீய உரிமைகளை அடைய முயன்றனர். அங்கியர்களுக்குச் சில விசேஷ உரிமை

களை அல்லது சில பிரதேசங்களைக் கொடுத்து, அவர்களது ஆதரவை அடைந்து தமது சகோதரர்களையே மோசஞ்செய்தனர். எதிரிகளுடன் தக்க சமயத்தில் சேர்ந்து தங்களுக்கு வருஷந்தோறும் உணவளித்து உடையளித்து காப்பாற்றிய எஜமானனுக்குத் துரோகம் செய்தனர். இவ்விதமான பல காரியங்களைச் செய்ததனால் இந்தியாவில் முஸ்லிம்களது பலம் சிதறுண்டதுடன், பகைவருக்குப்பலங்கொடுப்பதாகவுமாயிற்று. இவ்விதமான கலகங்களுக்கும், துரோகங்களுக்கும் சதிகளுக்கும் முக்கிய காரணம் பொருளாசையேயாகும். பொருளாசை இல்லாதிருந்தால் இந்தியாவில் முஸ்லிம்களை நசுக்கவோ, முஸ்லிம்களின் ஆதிக்கத்தைப் பிடுங்கிக்கொள்ளவோ மனிதர் எவராலும் முடியாது.

இப்பொழுதுங்கூட இந்தியாவில் முஸ்லிம்களுக்குச் செல்வாக்கையும் ஆதிக்கத்தையும் உண்டுபண்ணிக்கொள்ளவேண்டுமானால் அஃது நிறவேமுடியாத காரியமல்ல. ஆனால், முஸ்லிம்கள் ஒரு காரியத்தை மாத்திரம் கையாளவேண்டும். அதாவது அவர்கள் பொருளாசையை விட்டுவிட வேண்டும். ஆனால், உலகில் எந்த மனிதனுக்கும் பொருளாசை கொஞ்சங்கூட இல்லாமலிருக்குமா? பொருளில்லாமல் ஒரு காரியமும் நடைபெற முடியாமலிருக்கிற இக்காலத்தில் பொருளின் மீது ஆசை கொள்ளாமலிருக்க முடியுமா? பொருளாசை வேண்டாம் என்றால் உலகில் அப்புறம் வீடு வாசல், மனைவி மக்கள் ஆகிய யாதொன்றும் இல்லாமலிருக்க வேண்டும் என்ற வினக்கள் உண்டாகலாம்.

இஸ்லாம் மதம் பொருள் தேடுவதை, பொருளைச் சம்பாதிப்பதை விலக்கவில்லை. சுயமே தொழில் செய்து ஹலாலான உணவைத் தேடிச் சம்பாதித்து உண்ணவேண்டுமென்றே போதிக்கிறது. ஹஜ்ரத் உதுமான் (றலி.), ஹஜ்றத் அபூபக்கர் ஸித்தீக் (றலி.), ஹஜ்றத் அப்துர் ரஹ்மானிப்னு ஒளப் (றலி.) ஆகிய ஸஹாபிகள் லக்ஷாதிபதிகளாக இருந்திருக்கிறார்கள். பெரும் பெரும் வர்த்தகத் தொழில்களைச் செய்திருக்கிறார்கள். ஹஜ்றத் பிரானே பிர் தஸ்தகீர் ஷெய்கு அப்துல் காதிர் ஜீலானீ (ரஹ்.), இமாம் அஃலம் அபூ ஹனீபா (றஹ்.) போன்ற பெரிய குத்துபுகளும், இமாம்களுங்கூட லக்ஷக்கணக்கான விலை மதிப்புள்ள சாமான்களை ஏற்றுமதி இறக்குமதி செய்யும் பிரபல வர்த்தகர்களாக இருந்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் யாவரும் பொருளுக்கு எவ்வளவு அந்தஸ்துக் கொடுக்க வேண்டுமோ அவ்வளவுதான் கொடுத்து வந்தனர். பொருளுக்காக மார்க்கத்தையோ, சமூகத்தையோ, நீதியையோ, சத்தியத்தையோ கைவிடவில்லை. பொருளைத் துரும்பாகவே மதித்து வந்தனர். ஹஜ்றத் இமாம் அபூஹனீபா (ரஹ்.) அவர்கள் ஒருவருக்கு 20 ஆயிரம் திர்ஹம் கடனகக்கொடுத்திருந்தார்கள். அக்கடன் கொடுக்கப்படவேண்டிய தவணையில் கடன் வசூலாகவில்லை. இப்படி இருக்கும்போது ஒரு முறை ஒரு அலுவலாக வெளியிற் சென்று கொண்டிருந்தபோது, கடன் வாங்கிய அந்த நபர் எதிரில் வந்துகொண்டிருந்தார். இமாம் அவர்கள் வருவதை அவர் பார்த்துப் பக்கத்திலுள்ள ஒரு சந்தில் பிரவேசித்துத்தலைமறைவாக இருந்து கொண்டார்கள். ஆனால், இமாம் அவர்கள் தமக்குக் கடன் கொடுக்கவேண்டிய நபர் தம்மைக் கண்டதும் பக்கத்துச் சந்தில் சென்று மறைந்து கொண்டதைக் கவனித்துக்கொண்டு, அச்சந்தினண்டையில்வந்ததும் நின்றுகொண்டு தம்மிடம் கடன் வாங்கி மறைந்து கொண்டிருக்கிற அவரை ஆள்விட்டனுப்பி வரவழைத்து, தம்மைக் கண்டவுடன் சந்துக்குள் நுழைந்து மறைந்ததைக் குறித்து விசாரித்தார்கள். அதற்கவர் "கடன் தொகை கொடுபடாமலிருப்பதால் வெட்கி அவ்வாறு சென்றேன்" என்பதாக அவர் பதிலளித்தார். இந்தப் பதிலைக் கேட்டவுடன் இமாம் அவர்கள் தமக்கு அவர் கொடுக்க வேண்டிய கடன் தொகை முழுவதையும் மன்னித்துவிட்டார்கள். ஆகவே, அல்லாஹுத்தஆலா நமக்குப்பொருளைச் சோதனையாக ஏற்படுத்தி இருக்கிறான். எனவே, நாம் அதனை நியாயமான வழியில் சம்பாதித்துச் செலவு செய்கிறோமா? அல்லது அக்கிரமமாகச் சம்பாதித்துத் துர்விநியோகஞ் செய்கிறோமா என்பதைப் பகிரங்கமாக்குவதற்காகப் பொருளைக் கொடுத்துச் சோதிக்கிறான். தரித்திரமான காலத்திலும் நாம் சன்மார்க்கத்தைக் கடைப்பிடித்து, நமது மார்க்க பத்தியைக் குறைக்காமலிருக்கிறோமா இல்லையா என்பதைப் பகிரங்கப் படுத்துவதற்காக நமக்கு பொருள் நஷ்டத்தையும் தரித்திரத்தையும் அளித்து சோதிக்கிறான். இதனைத்தான் இந்த ஹதீதில் "பித்னா" என்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. எல்லாம் வல்ல இறைவன் நம்மை இந்த பித்னாவில் வெற்றி பெற்ற கூட்டத்தில் சேர்த்தருள் புரிவானாக. ஆமீன்.



நம்மவரின் அசிரத்தை

“என்னை வணங்குவதற்காகவல்லாமல் மனிதனையும் ஜின்னையும் நான் சிருஷ்டிக்கவில்லை” என்பதாக எல்லாம்வல்ல இறைவன் தனது திருமறையிற் கூறி, மனிதப் பிறவியின் லக்ஷியம் இன்னதென்பதை விவரித்துக் கூறியுள்ளான். அவன் நமக்கு இவ்விஷயத்தை அறிவித்தது மட்டுமில்லை, இதனை நமக்கு ஞாபக மூட்டுவதற்காக மனிதவர்க்கத்தின் மூலப் பிதாவான ஹஜ்ரத் ஆதம் (அலை.) அவர்களைத் தனது கலீபாவாக நியமித்து அனுப்பினான். அவர்களுக்குப்பின் தொடர்ச்சியாக அவ்வப்போது நமக்கு நமது பிறவியின் லக்ஷியத்தை எடுத்துரைத்து, நமக்குச் சன்மார்க்க வழியைக் காண்பிப்பதற்காக ஆயிரக்கணக்கான நபிமார்களை அனுப்பினான். ஒரு சொற்படி 124 ஆயிரம் நபிமார்கள் இவ்வுலகில் தோன்றினார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. திரு குர்ஆனில் இந்த எண்ணிக்கை சம்மந்தமாய் தெளிவான விபரம் கூறப்பட்டில்லை. என்றாலும், உலகிலுள்ள எல்லா வர்க்கத்தாரிடத்திலும் ‘பஷீர்’களையும், ‘நதீர்’களையும் அதாவது நல்லோருக்கு மறுமையில் நற்பயன் கிடைக்குமென்ற சுவிசேஷத்தை அறிவிப்பவர்களையும், தீயோருக்கு தீமைப்பயன் கிடைக்குமென்று எச்சரிக்கை செய்பவர்களையும் அனுப்பி, மனித வர்க்கத்தைச் சேர்ந்த எச்சமுகத்தாரும் தங்களுக்கு ஆண்டவனது கட்டளை வரவில்லை; சன்மார்க்கத்தைப்பற்றி நாங்கள் அறிந்து கொள்ளவில்லை என்று கியாமத்து நாளில் புகல் கூறுவதற்கு இடமில்லாமற் செய்து விட்டான்.

இவ்வாறு தனித்தனியே ஒவ்வொரு சமூகத்திற்கும் பஷீர்களையும், நதீர்களையும் அனுப்பித் தனது சன்மார்க்கத்தை உணர்த்தியது போதாதென்று, இறுதியாக உலகிலுள்ள மனு, ஜின் ஆகிய இரு வர்க்கத்தாருக்கும் பொது நபியாக எம்பிரான் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்.) அவர்களைச் சென்ற 1350 வருஷங்களுக்குமுன் அனுப்பி, உலக மக்களுக்குச் சன்மார்க்கத்தை என்றென்றும், இனியில்லாவண்ணம் எடுத்தியம்பிக்கொண்டிருப்பதற்காக பொது மறையாம் நமது திருமறையான புருக்கானுல் மஜீத் என்னும் குர்ஆன் ஷரீபையும் நமக்கருளியுள்ளான்.

திருநபி (ஸல்) அவர்கள் இத்திருமறையை இனியில்லாவண்ணம் மக்களுக்கு நன்கு பிரசாரம் செய்து, தங்களது இவ்வுலகத்தைய புற ஜீவியகாலத்தில் அறபி நாட்டிலுள்ள ஹிஜாஸ் மாகாணத்தில் இஸ்லாம் அல்லாத ஏனைய தவறான மதங்களை எல்லாம் இல்லாதொழித்து, யாவரும் இஸ்லாம் மதத்தைத்தழுவும்படி செய்தார்கள். அறபி நாட்டிலுள்ள ஏனைய பகுதிகளிலும் இஸ்லாம் மதம் மிகைத்தது. சுருங்கக்கூறின், அறபிதேசம் சுத்தப்படுத்தப்பட்டது. உலகிலுள்ள ஏனைய பகுதிகளுக்குச் சென்று இஸ்லாம் மதத்தைப் பரவச் செய்யவேண்டும் எனத் தங்களது ஸஹாபிகளுக்கும் முஸ்லிம்களுக்கும் கட்டளையிட்டு இவ்வுலகத்தை விட்டுச் சென்றார்கள். ஆனால், இவ்வுலகம் தோன்றியகாலம் முதல் சன்மார்க்கத்திற்கு விரோதமாக அநேக துன்மார்க்கர்கள் இருந்து கொண்டிருந்ததுபோல, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது காலத்திலும், அதற்கப்புறமும் இஸ்லாமிய சன்மார்க்கத்தை எதிர்ப்பவர்கள் இருந்தனர். இதன் பயனாக, நாயகம் (ஸல்.) அவர்கள் காலத்திலேயே பல யுத்தங்கள் நிகழ்ந்தன. அப்புறம் ஸஹாபிகள் தாபியீன்கள் காலத்திலும் அநேக யுத்தங்கள் நடைபெற்றன. முஸ்லிம்கள் ஜெயசீலர்களாக இருந்ததனால் துன்மார்க்கர்கள் ஒடுக்கப்பட்டனர்.

இவ்விதமாக, இஸ்லாம் தோன்றிய காலம் முதல் இன்றுவரை அதனை எதிர்ப்பவர் இருந்துகொண்டு தங்களாலானவரைப் பலவித எதிர்ப்புகளைச் செய்துகொண்டிருக்கின்றனர். முஸ்லிம்களும் இவ்வெதிர்ப்புகளை அவ்வப்போது தடுத்து இஸ்லாம் மதத்திற்கு ஏற்றத்தை யுண்டு

பண்ணிக்கொண்டே இருக்கின்றனர். இஸ்லாம் மதத்தை இவ்வாறு எதிர்த்தவர்கள் முஸ்லிம் அல்லாதார் மட்டுமில்லை, தங்களை முஸ்லிம் என்று சொல்லிக்கொண்டவர்களும் கூட அநேக ருளர். இதன் பலனாக முஸ்லிம்களுக்குள் பற்பல கக்ஷிகள் தோன்றின. சமீபகாலத்தில் பஹாயி மதம் என்றும், காதியானி மதம் என்றும் கூடச் சில மதங்கள் தோன்றின. பஹாயி மதம் இந்தியாவில் அதிகம் உரம்பெறவில்லை; இந்தியாவில் அதிகமாகப் பிரசாரம் செய்யப் படவுமில்லை. ஈரான்போன்ற இஸ்லாமிய நாட்டில் அது தோன்றி அங்கேயே பிரசாரம் நடைபெற்றதால், அது முளையிலேயே அந்நாட்டு மக்களாலும் இஸ்லாமிய அரசாங்கத்தாராலும் கிள்ளி எறியப்பட்டது. ஆதலால், அம்மதத்தைப் பின்பற்றுபவர்கள் தங்கள் கொள்கைகளை பகிரங்கமாகக் கூறிக்கொள்ளவும், தங்களை பஹாயி மதத்தார் என பகிரங்கமாகச் சொல்லிக் கொள்ளவும் இப்பொழுது துணிவதில்லை.

ஆனால், காதியானி மதத்தை ஸ்தாபித்தவர் இந்தியர். இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சி ஒழிந்து கிறிஸ்துவர்களது ஆட்சி ஸ்தாபிதமாகி இருப்பதும், இஸ்லாத்திற்கு விரோதமான பிரசாரம் ஆரிய சமாஜிகளாலும், கிறிஸ்துவர்களாலும் புரியப்படுவதும் இம் மதத்தை ஸ்தாபித்தவருக்கு தக்க வசதியாக அமைந்தன. ஆகவே, அவர் இஸ்லாம் மதத்தின் சார்பாக ஆரியசமாஜிகளுடையவும், கிறிஸ்துவர்களுடையவும் பிரசாரத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்வதாக நடித்து, ஆரம்பத்தில் அவர்களுடன் அநேக தர்க்கங்களைச் செய்ததுடன், பல புத்தகங்களையும் பிரசுரங்களையும் வெளியிட்டார். தங்களது சுயேச்சையை இழந்து பரதவித்துக் கொண்டிருந்த முஸ்லிம்கள் இவரது பிரசாரத்தைக் கண்டு ஆனந்தங் கொண்டனர். வேண்டிய மட்டும் உதவி புரிந்தனர். இம் மதஸ்தாபகருக்குப் பொருள் சேர்ந்தது. ஆங்கில பாஷையைக் கற்றுத் தேர்ந்தவர்களும், இஸ்லாம் மதத்தில் போதிய பாண்டித்துவ மில்லாதவர்களுமான சிலர் பக்கபலமாகச் சேர்ந்தனர். ஆகவே, அவர் தம்முடைய குப்ரான கொள்கைகளை அவர்களுக்குப் போதித்தார். அவர்களும் அவைகளை மெய்யான இஸ்லாமியக் கொள்கைகளென நம்பி அவரைப் பலமாகப் பின்பற்றத் தொடங்கினர்.

காதியானி மதத்தை ஸ்தாபித்தவர் தைரியங் கொண்டு தமது புத்தகங்களிலும் பிரசங்கங்களிலும் தமது குப்ரிய்யத்தான கொள்கைகளைப் பிரசாரம் செய்யத் தொடங்கியதுடன், அவைகளுக்கு இஸ்லாமிய சீர்திருத்தம் என்றும் கூறினர். அறபிப் பாஷையையும், இஸ்லாம் மதக் கல்வியையும் முறைப்படி பயின்ற மேதாவிகள் இவரது பிரசாரத்தை எதிர்த்தனர்; கிளர்ச்சி செய்தனர். ஆதலால், அவரை ஆதரித்த சாமான்ய முஸ்லிம்கள் அவரைக் கைவிட்டனர். ஆயினும், அவரைச் சீர்திருத்தவாதி யென்றும்; இஸ்லாம் மதத்தை உள்ளது உள்ளபடி போதிப்பவரென்றும் கருதிய சிலர் பலமாக ஆதரிக்கத் தொடங்கினர். எனவே, முஸ்லிம்களுள் கக்ஷி பிரதிகக்ஷி தோன்றிற்று; எங்கு பார்த்தாலும் காதியானிகளுக்குப் பலமான எதிர்ப்பும் கண்டனங்களும் தோன்றின. தங்களுக்கு அபயங் கிடைக்கவேண்டும் என்ற எண்ணத்தால் இம்மதத்தை ஸ்தாபித்தவர், தமது மதத்தைப் பின்பற்றுபவர் ராஜபக்தியுடனிருக்கவேண்டும், பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எள்ளளவும் எதிர்ப்புச் செய்யக்கூடாது என்று திட்டம் செய்தார். பிரிட்டிஷ் அரசாங்கம் இத் தேசத்திற்குப் புதியதாகவும், அந்நியமாகவு மிருந்ததால், இங்குள்ள மக்களிடை கக்ஷிப் பிளவை யுண்டுபண்ணி, இவர்களில் ஒரு பகுதியினரின் ஆதரவைப் பெற வேண்டியது அவசியமாக இருந்தது. ஆகவே, அவர்களுக்கு,முஸ்லிம்களுக்குள்தோன்றிய இக்கக்ஷிப் போராட்டம்நல்லவசதியாகஇருந்ததாலும்,காதியானிகள் பிரசாரத்தை அவர்கள் தடை செய்யவில்லை. தவிரவும், மத விஷயத்தில் தலையிடுவதில்லை என்று சாக்குப் போக்குக்கூறிமுஸ்லிம்களின் கக்ஷிப்பிரிவினையை வளரவிட்டார்கள். காதியானிகளில் பலர் ஆங்கில பாஷையைப் பயின்றிருந்ததாலும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்த்து, அவர்களுக்கு ஆதரவு புரிபவர்களாக இருந்ததாலும் காதியானிகளுக்குப் பல உத்தியோகப் பதவிகள் தாராளமாக அளிக்கப்பட்டன. எனவே, காதியானிகள் முஸ்லிம்களது பலத்த எதிர்ப்பை அரசாங்கத்தின் சகாயத்தால் சமாளித்தனர். அப்புறம் காதியானி மத ஸ்தாபகர் மரித்தார். அவரது சிஷ்யர்களுக்கிடையில் தலைமைப் பதவியில் போட்டி யேற்பட்டு மிர்ஜாயீ பார்ட்டி, அஹ்மதீ பார்ட்டி என்று பல பார்ட்டியாகப் பிரிந்தனர். முஸ்லிம்களிடம் ஆதரவு பெறுவதற்கான யுக்திகளை ஒவ்வொரு கட்சியினரும் தேடினர். இறுதியாக, 'இஷா அத்தே

இஸ்லாம்' தான் சரியான முறை என்று கண்டு, ஐரோப்பா, அமெரிக்கா முதலிய அந்நிய நாடுகளில் இஸ்லாமியப் பிரசாரம் செய்வதாகவும், அங்கு சுத்தமான இஸ்லாமியக் கொள்கைகளைப் பிரசாரம் செய்வதாகவும், அவர்களுக்கு ஆங்கிலம் முதலிய ஐரோப்பிய பாஷைகளில் தப்ஸீர் முதலிய நூல்கள் இயற்றுவதாகவும் கூறி, இந்திய முஸ்லிம்களிடம் பிரசாரம் செய்தனர். மேனாட்டில் இஸ்லாம் மதத்தைப் பிரசாரம் செய்வதையும், மேனாட்டுப் பாஷைகளில் திருகுர்ஆனுக்கு வியாக்யான உரைகள் எழுதுவதையும் அறிந்த முஸ்லிம்கள் தாராளமாகப் பொருளுதவி செய்தனர்.

ஆனால், காதியானி மதத்தைச் சேர்ந்தவர்களது மேனாட்டுப் பிரசாரத்தின் உள்வயணம் வெளியானபோது, முஸ்லிம்கள் அதனைப் பலமாக எதிர்த்ததுடன், தங்கள் பொருளுதவியையும் நிறுத்திக்கொண்டனர். ஆகவே, அவர்கள் பத்திரிகைகளைப் பல பாஷைகளிலும் பிரசுரம் செய்து, காதியானிகளின் உள்வயணமறியாத தூர தேசங்களிலுள்ள முஸ்லிம்களை ஏமாற்றிக் காபிராக்கும் வேலையைத் தொடங்கினர். இம்முறையில் நமது தமிழ் நாட்டிலும் காதியானிகளது கிளை ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப்பட்டன. பத்திரிகைகளும் பிரசாரத்திற்காக ஸ்தாபிக்கப்பட்டன. ஆகவே, தமிழ் நாட்டில் லாகூர் அஹ்மதீ பார்ட்டியினரின் கிளை ஸ்தாபனமும் சிலோனில் மிர்ஜாயீ பார்ட்டியினரின் கிளை ஸ்தாபனமும் ஏற்பட்டு "தாருல் இஸ்லாம்", "தூதன்" போன்ற பத்திரிகைகளும் பிரசுரமாயின. தங்கள் வழக்கத்திற்கேற்ப அக்கூஷியினர் இஸ்லாத்திற்குழைப்பதாகவும், தாங்கள் இஸ்லாமிய ஊழியத்திற்கு அற்பணம் செய்வதாகவும் சொல்லிக்கொண்டு காதியானி மதத்தின் கொள்கைகளைப் பிரசாரம் செய்தனர்; அநேக புத்தகங்களையும் இயற்றினர். இம்முறையில்தான் "ஜவாஹிருல் புருக்கான்" என்ற தமிழ் தப்ஸீர், "இயேசுவின் இரகசியம்" "இஸ்லாமிய ஞான போதம்" போன்ற அநேக புத்தகங்கள் வெளியாயின. இப்புத்தகங்களில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் இஸ்லாமிய சன்மார்க்கத்திற்கு முற்றிலும் விரோதமானவைகளாக இருப்பதுடன், இதிலுள்ள கொள்கைகளை நம்புபவர்களைக் காபிர்களாக்கி விடுவனவாகவுமிருக்கின்றன.

இப்பிரசாரத்தை ஆரம்பத்திலேயே நம்மிலுள்ள மார்க்க பக்தி நிறைந்தவர்களும், விஷய ஞானமுள்ளவர்களுமான முஸ்லிம்களும், உலமாக்களும் உணர்ந்து எதிர்த்தனராயினும், முறைப்படி பிரசாரம் செய்யாததால் இவ்வியக்கம் நாளுக்குநாள் பரவி, நமது இள வாலிபர்களை இஸ்லாத்தைவிட்டு மாற்றக்கூடிய அளவிற்குப் பலம் பெற்றது. ஆகவே, இத்தீய பிரசாரத்தைத் தடுத்து, நம்நாட்டு முஸ்லிம்களுக்கு இஸ்லாமிய சன்மார்க்கத்தைப் பிரசாரம் செய்வதற்காகவும், இஸ்லாத்திற்கு விரோதமாக இதரர்கள் செய்யும் காரியங்களை அவ்வப்போது தடுப்பதற்காகவும் அநேக அறிஞர்களும், மார்க்க பக்தர்களும் கூடி, சென்னையில் ஒரு சங்கத்தை ஸ்தாபித்து அதற்கு "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கம் என்று பெயரிட்டனர். இக்காலத்தில் எந்த இயக்கமும் பத்திரிகைகளின் துணையுடன் ஆரம்பமாவதாலும் இஸ்லாத்தின் விரோதிகளான காதியானிகளும், மற்றவர்களும் பத்திரிகைகளின் மூலம் தங்கள் பிரசாரத்தைச்செய்து வருவதாலும், அவ்வப்போது அவர்களது தீய பிரசாரத்தைப் பொது ஜனங்களுக்கறிவித்து, விரோதிகளுக்குத் தக்க வாயாப்புச் செய்வதற்காக ஷை நமது சங்கத்திற்கென தனிப் பத்திரிகை ஒன்றிருக்கவேண்டும் என்ற முடிவுக்கு நமது சங்கத்தார் வந்து உங்களுடைய இந்த "ஹிபாஜத்துல் இஸ்லாம்" மாசிகையை ஆரம்பித்து நடத்தி வருகிறார்கள்.

அன்று உங்களுடைய இம்மாசிகை எந்நோக்கத்தின்பேரில் ஸ்தாபிக்கப்பட்டதோ அந்நோக்கத்திலிருந்து சிறிதும் வழுவாமல் வெற்றியுடன் உழைத்து வருவது உங்கள் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இப்பத்திரிகையும் இச்சங்கமும் ஏற்பட்ட பிறகுதான் மிர்ஜாயீ, அஹ்மதீ பார்ட்டியினரின் கொட்டம் நமது நாட்டில் அடங்கிற்றென்று கூறுவது மிகையாகாது. இச்சங்கத்தின் பிரசாரகர்களும், ஹிஸ்புல்லாக்கள் என்ற இஸ்லாமியப் பிரசாரக் கூட்டத்தினரும் நமது தமிழ் நாட்டிலும், கொளும்பு முதலிய சிலோன் பகுதிகளிலும், மலேயா முதலிய நாடுகளிலும் சுற்றுப்பிரயாணம் செய்து சன்மார்க்கப் பிரசாரத்தைச் செய்ததன் பயனாக காதியானி மதத்தின் குப்ரிய்யத்தான பிரசாரத்தை நம்மவர் உணர்ந்து, காதியானிகளுக்கு உதவி புரிவதை நிறுத்தினர்; அவர்களது பத்திரிகைகளைப் பகிஷ்கரித்தனர். இதனால் கோபமூண்ட காதியானிகள் ஹிஸ்புல்லாக்களையும் நமது சங்க உலமாக்களையும், அபிமானிகளையும் வாயில் வந்தபடி திட்டி கோர்ட்டுகளுக்கும் சென்று

இறுதியாக ஒடுங்கினர். சிலகாலம்வரை காதியானிகள் தங்களது பிரசாரத்தை முற்றிலும் கைவிட்டனர். ஆயினும், நம்மவர் மென்மேலும் அதிக உற்சாகத்துடன் இச்சன்மார்க்கப் பிரசாரத்தில் ஈடுபடாததால் இப்பொழுது தங்கள் பிரசாரத்தை மறுபடியும் மெதுவாக ஆரம்பித்திருக்கின்றனர். இவர்களது இப்பிரசாரத்தின் விருத்தாந்தத்தை விபரமாக எழுதினால் இவ்வியாசம் மிக விரிவடைந்து விடுமாதலால் இத்துடன் சுருக்கிக் கொள்கிறோம்.

நம்முடைய “ஹிபாஜத்துல் இஸ்லாம்” சங்கம், காதியானிகளது பிரசாரத்தை எதிர்ப்பதை மட்டும் செய்யவில்லை. “இஷாஅத்தே இஸ்லாம்” வேலையையும் செய்து வருகிறது. இதன் பயனாக மதுரை ஜில்லாவிலுள்ள கம்பம் என்னும் ஊரில் சென்னை மாகாண இஷாஅத்துல் இஸ்லாம் சங்கம் நிறுவப்பட்டு ஆயிரக்கணக்கான அந்நிய மதத்தினர் இஸ்லாத்தில் சேர்க்கப்பட்டனர். அப்புறம் நமது தமிழ் நாட்டிலுள்ள அநேக ஊர்களில் இஷாஅத்துல் இஸ்லாம் சங்கங்கள் நிறுவப்பட்டன. இஸ்லாம் மதத்தையும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களையும் இழிவு படுத்தி எழுதப்படும் புத்தகங்களையும் அதன் ஆசிரியர்களையும் கண்டித்து நம்மவரால் எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளிலும் நமது சங்கம் ஒத்துழைத்து தன்னாலான சகல முயற்சிகளையும் செய்தது.

இவை உங்களது சங்கமும், உங்களது அருமை மாசிகை ஹிபாஜத்துல் இஸ்லாமும் செய்த அரும்பெரும் தொண்டுகளில் சிலவேயாகும். இனி, இச்சங்கத்தையும், இச்சங்கத்தின் மாசிகையையும் நம்மவர் ஆதரித்த விபரத்தைப் பற்றிச் சிறிதுகூறுவாம். இச்சங்கம் நிறுவப்பட்டபோது மார்க்க பக்தியுள்ள முஸ்லிம் கனதனவான்கள் அதிக உற்சாகம் காட்டினர். சென்னையிலும் வெளியிலுமுள்ள பரோபகாரிகளால் சில ஆயிரம் ரூபாய்கள் இச்சங்கத்திற்கு நன்கொடையாக அளிக்கப்பட்டன. ஹிஸ்புல்லாக்கள் பிரசாரத்தின் போழ்து, அதன் செலவில் பெரும் பகுதியை மார்க்க பக்தர்களான முஸ்லிம் கனவான்கள் ஏற்றுக்கொண்டனர். காதியானிகளால் ஏற்பட்ட வழக்குகளிலும் பொருளுதவி செய்தனர். அவர்களது உதவி இல்லாவிட்டால் இதுகாறும் உங்களது சங்கம் வெற்றியுடன் தனது வேலையைச் செய்திருக்க முடியாது. அதற்காக அக்கனவான்களுக்கு மனமார்ந்த நன்றியறிதலைச் சமர்ப்பித்துக் கொள்கிறோம்.

ஆனால், உங்களது அருமை மாசிகையான “ஹிபாஜத்துல் இஸ்லாம்” சஞ்சிகைக்கு நம்மவர் போதிய ஆதரவு புரியவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். சங்கத்தின் அங்கத்தினர்கள் சங்கத்திற்குச் சந்தா செலுத்தினரேயன்றி பத்திரிகைக்குச் சந்தாச் செலுத்தவில்லை. அநேகமாக சங்க அங்கத்தினருக்குப் பத்திரிகை இனாமாகவே அனுப்பப்பட்டது என்று கூறலாம். சந்தாதாரர்கள் ஆயிரக்கணக்கில் இருந்தால்தான் பத்திரிகை நஷ்டமில்லாமல் நடைபெற முடியுமென்ற விஷயத்தை அன்பர்கள் கவனித்து, பத்திரிகைக்குச் சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுக்கும் விஷயத்தில் போதியவளவு கவனம்செலுத்தவில்லை. இதன்பயனாக உங்களது இப்பத்திரிகை நஷ்டத்திலேயே வேலைசெய்யவேண்டி இருந்தது. வருஷந்தோறும் இதற்கேற்படுகிற பண நஷ்டத்தை உங்கள் சங்கம் சரிக்கட்டவேண்டியிருந்ததால், உங்கள் சங்கத்திற்கு நன்கொடையாகக் கொடுத்திருந்த மூலதனம் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்துகொண்டே வந்தது. இறுதியாக, மூலதனம் முழுவதும் செலவாகிவிட்டது. பத்திரிகைக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்தவர்களும்கூட தங்கள் சந்தாத் தொகையை முன்பணமாக அனுப்பவேண்டுமென்பதைக் கவனிப்பதில்லை. சந்தாதாரர்களில் பலர் 2, 3 வருஷ சந்தாத் தொகைகளை இன்னமும் கொடுக்காமலே இருந்து வருகின்றனர். இதனால், ஆயிரக்கணக்கான பணம் சந்தாதாரர்களிடம் இன்னமும் பாக்கியாக இருந்து வருகிறது. இவைகளை வசூல் செய்வதற்காக சங்கத்தின் பிரசாரகர்களும் உத்தியோகஸ்தர்களும் சுற்றுப்பிரயாணம் செய்ய நேரிடுவதால், அதிகமான பணச்செலவு ஏற்படுகிறது. இதனால், பத்திரிகையை வாரப்பதிப்பாக மாற்றவோ, பத்திரிகைக்கென தனி அச்சுக்கூடப் ஏற்படுத்தவோ, இதர அபிவிருத்திகளோ செய்யமுடியவில்லை.

தவிர, இப்பத்திரிகை ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கமே இஸ்லாம் மதத்தின் விரோதிகளான காதியானிகளுக்கும் பிறருக்கும் தக்க வாயாப்புக்கொடுத்து, சத்திய சன்மார்க்கத்தின் கொள்கைகளையும் திட்டங்களையும் முஸ்லிம் பொது ஜனங்களுக்கு அறிவிக்கவேண்டும் என்பதாக இருப்பதால் இம்மாசிகையில் அதிகமாக மார்க்க சம்மந்தமான விஷயங்களை பிரசுரிக்கப்பட்டு

வருகிறது. இம்முக்கிய நோக்கத்தை நிறைவேற்றிய பிறகுதான் மற்றவைகளைக் கவனிக்க வேண்டும். இந்நாட்டிலுள்ள காதியானிகள் எப்பொழுதும் ஏதேனும் ஒருவிதத்தில் தங்கள் பிரசாரத்தைச் செய்யாமலிருப்பதில்லை. ஆதலால், அதற்கு மறுமொழி கொடுக்க வேண்டிய அவசியமேற்படுகிறது. தவிரவும், உங்களது இப்பத்திரிகை மாதம் ஒருமுறை வெளியாகுவதால் இவர்களுக்கு மறுப்பாகவும், இஸ்லாத்தின் ஏற்றத்தைக் குறித்தும் எழுதும் வியாசங்களுக்கே பத்திரிகையில் போதிய இடம் கிடைப்பதில்லை. அன்பர்களுடையவும் அபிமானிகளுடையவும் விருப்பத்தைப் பூர்த்தி செய்யவேண்டுமாயின் குறைந்த பக்ஷம் மாதம் இரு முறை அல்லது வாரம் ஒரு முறை இப்பத்திரிகையைப் பிரசுரம் செய்யவேண்டும். இவ்வாறு செய்வதற்குப் பணம் தேவை. பணம் இல்லாமல் இக்காரியங்களைச் செய்ய முடியாது.

இற்றைக்கு நம் மாசிகையின் ஆயுள் 9 ஆண்டு பூர்த்தியடைகின்றது. இந்த ஒன்பதாண்டுகளுக்கிடையே இதனை நடத்துவதில் எவ்வளவோ சிரமமேற்பட்டிருக்கிறது. அநேகர் 2, 3 வருடங்கள் பத்திரிகை தருவித்து பின்னர் வி. பி.யை திருப்பி அனுப்பி விடுகின்றனர். இம்முறையில் அதிகமான பாக்கிகளிருக்கின்றன. சங்கத்தின் பண்டுகளெல்லாம் இதிலேயே செலவாகிவிட்டது. இனி, சந்தாதாரர்களின் உதவியின்றி பத்திரிகையை நடத்த முடியாத நிலைமையிலிருக்கிறோம். ஆகவே, அன்பர்கள் இவைகளை ஊன்றி கவனித்து தங்கள் பாக்கிகளை அனுப்பிக்கொடுப்பதுடன் ஏராளமான சந்தாதாரர்களைச் சேர்த்து தக்க உதவி புரிந்தால்தான் மேலும் மேலும் பத்திரிகையை நடத்திச் செல்ல முடியுமென்பதை அதிவருத்தத்துடன் அன்பர்களுக்கு அறிவித்துக்கொள்கிறோம். மார்க்க அபிமானிகள் முக்கியத்தை உணர்ந்து ஆவன செய்ய முன்வருவார்களாக.

நாயகம் (ஸல்.) அவர்களுக்குப் பிறகு மக்காவில் நிகழ்ந்ததென்ன ?

“ நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் இப்பூவுலகைவிட்டு மறைந்து விட்டார்கள். ஹஜ்றத் அபூபக்கர் ஸித்தீக் (றலி.) அவர்கள் கலீபாவாகத் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள் ” என்ற செய்தி திருமக்காவிற்கு எட்டிய போது, ஹிஜாஸிலுள்ள இப்பரிசுத்த பூமியில் ‘ இர்த்திதாத் ’ (இஸ்லாத்தைவிட்டு நீங்கிவிடுதல்) என்ற காரிருள் வந்துவிடுமோஎன்ற சந்தேகம் ஸுஹைலுப்னு அம்ர் ஆமிரி (றலி.) அவர்களுக்கு ஏற்பட்டது. ஏனெனில், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் வபாத்தான பிறகு, அறபி தேசத்தில் ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டது. அதற்கு “ பித்னயே இர்த்திதாத் ” என்று பெயர். “ ஹஜ்றத் முஹம்மத் (ஸல்.) அவர்கள் நபியாக இருந்திருந்தால் அவர் வபாத்தாகி இருக்கமாட்டார் ” என்பதாகச் சிலர் கருதினர். ஹுஜூர் (ஸல்.) அவர்களது வபாத்திற்குப்பிறகு நபித்துவம் முற்றுப்பெற்று விட்டது ; இனி நாம் எவருக்கும் கீழ்ப்படிய வேண்டியதில்லை ” என்பதாக ஒரு சாரார் நினைத்தனர். “ நாம் அல்லாஹ்வின் மீதுதான் ஈமான் கொண்டோம், முஹம்மதின்மீது ஈமான் கொள்ளவில்லை ” என்று மற்றொரு கக்ஷியினர் அபிப்பிராயப் பட்டனர். “ நாம் அல்லாஹ்வின்மீது ஈமான் கொண்டுள்ளோம்; ஹுஜூர் (ஸல்.) அவர்கள் அல்லாஹ்வின் றஸூல் என்பதையும் ஒப்புக்கொள்கிறோம் ; ஆதலால், நாங்கள் தொழுகையை நிறைவேற்றுவோம் ; ஆனால், ஜக்காத்துக் கொடுக்கமாட்டோம். ” என்று மற்றொரு பிரிவினர் கூறினர். முஸ்லிம்களுள் இவ்விதமான அபிப்பிராய பேதங்களேற்படுவதைக்கண்டு கிறிஸ்து மதமும் யூத மதமும் தலைதூக்கவாரம்பித்தன. இதற்குள்ளாக, முஸைலமத்துல்கத்தாபும், துலைஹாவும் தங்களுக்கு ‘ வஹி ’ வருவதாகவும், நபிப்பதவி தங்களுக்கிருப்பதாகவும் தாவாச்செய்து, ஒரு பெரும்

கக்ஷியை உண்டு பண்ணிக்கொண்டனர். இவர்களை எதிர்த்து அடக்கவேண்டும் என்று கலீபா ஹஜ்றத் அபூபக்ர் ஸித்தீக் (றலி.) அவர்கள் முடிவுசெய்து, இவர்களுடன் மார்க்க யுத்தம் செய்யப்புறப்பட்டு விட்டார்கள். ஏனைய ஸஹாபிகள் வேறுபல காரியங்களை உத்தேசித்து ஆரம்பத்தில் கலீபா அவர்களைச் சாந்தப்படுத்தமுயன்றனர். ஆயினும், இறுதியில் கலீபா அவர்களுக்குத் துணையாக ஜிஹாதுக்குத் தயாராகி விட்டனர். நாடெங்கும் ஏற்பட்டுள்ள இவ்வித கொந்தளிப்பான நிலைமையில் "மக்காவாசிகளும் கலீபாவிற்கு விரோதமாக புரட்சிக்காரர்களுடன் சேர்ந்துவிடக் கூடாது; அவர்களை இஸ்லாத்தில் உறுதியாக இருக்கச் செய்யவேண்டும்" என்ற எண்ணம் முற்கூறப்பட்ட ஸுஹைலுப்னுஅம்ர் ஆமிரி (றலி.) அவர்களுக்குண்டாயிற்று. ஆகவே, அவர்கள் திருமக்காவிலுள்ள குறைஷியரை கஃபா ஷரீபின் தலைவாயிலின்முன் ஒன்று கூட்டி, நாயகம் (ஸல்.) அவர்களது வபாத்துச் செய்தியை அறிவித்துப் பின் வருமாறு பிரசங்கம் புரிந்தார் :—

"ஜனங்களே! முஹம்மது (ஸல்.) அவர்கள்தான் வணக்கத்திற்குரியவர் என்று எவர் கருதி இருந்தார்களோ அவர்களது வணக்கத்திற்குரியவர் வபாத்தாகிவிட்டார். அவர்களது வணக்கத்திற்குரிய தொடர்பு அவர்களுக்கு அறுந்து விட்டது. ஆனால், அல்லாஹுத்தஆலாதான் தங்கள் வணக்கத்திற்குரியவன் என்று கருதி இருந்தவர்களுக்கு, அவர்களது நாயன் ஜீவித்திருக்கிறான். எப்பொழுதும் ஜீவித்தே இருப்பான். அவன் வபாத்தாக மாட்டான். "முஹம்மது அல்லாஹ்வின் றஸூல்தான், அவருக்குமுன் அநேக றஸூல்மார்கள் சென்று விட்டார்கள்" என்று அல்லாஹுத ஆலா தனது திருமறையின் ஓரிடத்தில் கூறி இருக்கிறான். சந்திரன் சூரியனின் பிரகாசம் உலகமெல்லாம் பரவி இருப்பது போல் இஸ்லாமும் உலகமெல்லாம் பரவி நிற்கும் என்று ஆண்டவன்மீது பிரமாணமாகக்கூறுகிறேன்.

மக்காவில் வசிப்பவர்களே! எல்லாருக்கும் பிந்தி முஸ்லிம்களாகி, யாவருக்கும் முதலில் 'முர்த்தத்து' களாகிவிட்டார்களே, அவர்களுடன் நீங்கள் சேர்ந்துகொள்ளவேண்டாம். அல்லாஹுத ஆலா தீனுல் இஸ்லாத்தைப்பாதுகாப்பவன். நான் இப்பொழுது நின்றுகொண்டிருக்கிற இதே இடத்தில் ஹுஜூர் (ஸல்.) அவர்கள் தன்னந்தனியே நின்றுகொண்டு "என்னுடன் சேர்ந்து நீங்களும் லாஇலாஹ இல்லல்லாஹு என்ற கலிமாவை ஓதுங்கள்; அறப்தேசம் முழுவதும் உங்களது சன்மார்க்கத்தை அங்கீகரித்துக் கொள்ளும்; அஜமிலுள்ள ஜனங்கள் உங்களுக்கு 'ஜிஸ்யா' வரி கொடுப்பார்கள்; நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்வதற்காக உங்களுக்கு அவன் கிஸ்ரா, கைஸருடைய பொக்கிஷங்களைத் தருவான்" என்று கூறியதை நான் பார்த்திருக்கிறேன்.

ஹுஜூர் (ஸல்.) அவர்களது இவ்வுபதேசத்தைச் சிலர் அப்பொழுது பரிகசித்தனர். சிலர் அங்கீகரித்தனர். ஆனால், அதற்கப்புறம் என்ன நிகழ்ந்தது என்பதை நீங்கள் உங்களது நேத்திரக் கண்களால் பார்த்துக் கொண்டீர்கள். நீங்கள் தீனுல் இஸ்லாத்திலேயே ஸ்திரமாக இருப்பீர்களாயின், இர்த்திதாதுடைய பித்னா உங்களுக்கு உண்டாகமாட்டாது என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஹுஜூர் (ஸல்.) அவர்கள் வபாத்தாகி, அபூபக்ர் ஸித்தீக் (றலி.) அவர்கள் கலீபாவாகி இருப்பது சன்மார்க்கத்தைப் பலப்படுத்துவதாகும். இதனால் தீனுல் இஸ்லாத்திற்கு அதிக நன்மையு மேற்படும். இம்மாறு தலைக்கண்டு இஸ்லாத்தைவிட்டு மாறுபவர்களது சிரசை வாங்கிவிடவேண்டும் என்று நாங்கள் திடசங்கல்பம் செய்திருக்கிறோம். அவர்களை ஒருபோதும் நாங்கள் உயிருடன் விடமாட்டோம்.

ஜனங்களே! அல்லாஹ்வின் மீது பூரணமாக நம்பிக்கை வையுங்கள். அல்லாஹ்வின் சன்மார்க்கம் நிலைநிற்கும். அவனது கட்டளை பரிபூரணமானது. அல்லாஹ்விற்கும் அவனது சன்மார்க்கத்திற்கும் உதவிபுரிபவர்களுக்கு, அல்லாஹ் உதவிசெய்வான்; அவனது சன்மார்க்கத்திற்குப் பலத்தைத் தருவான் என்பதை உணருங்கள். ஜனங்களே! இம்மாறுதலுக்குப்பிறகு ஒரு நன்மையான காரியத்தின் (அதாவது அபூபக்ர் ஸித்தீக் (றலி.) அவர்களைக் கலீபாவாகத் தெரிந்தெடுப்பதின்) பேரில், உங்களை ஒன்றுபடுத்தி ஐக்கியமாக்கி இருக்கிறான். நீங்கள் இவ்வொற்றுமையின் பேரில் ஸ்திரமாக இருங்கள். கலகம் குழப்பம் ஆகியவைகளுக்கு இடங்கொடுக்காதீர்கள்"

ஹஜ்றத் ஸுஹைலுப்னு அம்ர் ஆமிரி (றலி.) அவர்களது இப்பிரசங்கம் குறைஷியரின் சந்தேக ஊசாட்டங்களை நீக்கிற்று; முர்த்தத்தாகி விடவேண்டு மென்ற எண்ணம் உண்டாகி

இருந்தவர்கள் தானன்றோர்கள். அவர்களது இஸ்லாமிய உணர்ச்சி புத்துயிர்பெற்றது.

ஹஜ்ரத் ஸுஹைல் (றலி.) அவர்களது இப்பிரசங்கம் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் 'பத்று' சண்டையின் போழ்து கூறியமுன் அறிவிப்பின் பிரதி பிம்பமாகும். பத்றுச் சண்டையின்போழ்து இவர் குறைஷிக்காபிர்களது கூட்டத்தில் சேர்ந்திருந்தார். நிகரற்ற பிரசங்கி. தமது வாக்கு சாதுர்யத்தால் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைக் கொலை செய்யும்படி குறைஷியரைத்தூண்டிவிட்டுக்கொண்டிருந்தார். அச்சண்டையில் இவர் முஸ்லிம்களால் கைதி செய்யப்பட்டு, நாயகம் (ஸல்.) அவர்களிடம் அழைத்து வரப்பட்டபோது, ஹஜ்றத் உமர் பாறூக் (றலி.) அவர்கள் ஹுஜூர் (ஸல்.) அவர்களிடத்தில் "யாறஸூலல்லாஹ்! தாங்கள் உத்தரவு கொடுத்தால், அவரது முகவாய்க்கட்டைப் பற்களை நான் வாங்கிவிடுகிறேன்; இனி மேல் அவர் தங்களுக்கு விரோதமாக அறபியரிடம் பிரசங்கம் புரிந்து, அவர்களைத் தூண்டிவிட இயலாமலாக்கிவிடவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்கள். அதற்கு நாயகம் (ஸல்.) அவர்கள் "உமரே! ஸுஹைலை விட்டு விடுங்கள். அவர் இனி ஒரு சமயம் அல்லாஹ்வின் றஸூலைப் போற்றிப் புகழ்ந்து, தீமையான காரியங்களை விட்டுவிலகி இருக்கக்கூடும்' என்று கூறினார்கள். அன்று நாயகம்(ஸல்.)அவர்கள் கூறிய முன்னறிவிப்பானது இன்று இப்பிரசங்கத்தின் மூலம் நிறைவேறிற்று. இவரது பிரசங்கத்தின்பயனாக மக்காமுஅல்லமா "பித்னயே இர்திதா"தைவிட்டுக் காப்பாற்றப்பட்டது.

இவர் திருமக்கா ஜெயிக்கப்பட்ட வருஷத்தில் இஸ்லாத்தைத் தழுவி 'யர்மூக்' சண்டையில் ஷஹீதானார். இவர் குறைஷியரிலுள்ள லுவைய்யாக் கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

திருமக்காவில் குறைஷியருக்குப் பிறகு 'தக்கீப்' கோத்திரத்தாருக்கு அதிகச் செல்வாக்கிருந்தது. இக்கோத்திரத்திலும் நாயகம் (ஸல்.) அவர்களது வபாத்திற்குப் பிறகு சிறிது கலக உணர்ச்சி தோன்றிற்று; ஆனால், ஹஜ்றத் உதுமான் (றலி.) அவர்கள் இக்கோத்திரத்தாரை ஒன்று கூட்டி, ஸுஹைலுடைய பிரசங்கத்தைப்போல் உருக்கமானதோர் பிரசங்கம் புரிந்தார்கள். இதன் பலனாக, அவர்கள் கலக உணர்ச்சியையும் முயற்சியையும் கைவிட்டு, இஸ்லாத்தில் ஸ்திரமானார்கள்.

இவ்விதமாக திருமக்காவில் 'பித்னயே இர்த்திதாது' மிகச் சுலபமாக மறைந்து இஸ்லாம் மதத்தின்பால் அபிமானமும் உறுதியும் ஏற்பட்டது.

சன்மார்க்கத்தின் முக்கிய கொள்கை

சன்மார்க்கத்தின் முக்கிய முதற் கொள்கை அல்லாஹுத்த ஆலாவின்மீது ஈமான் கொள்வதுதான். ஆனால், உலகிலுள்ள எல்லா சமூகத்தினரும் இம்முதற் கொள்கைக்குரிய சரியான பாதையை விட்டுத் தூரத்திலேயே இருந்துகொண்டிருக்கின்றனர். நபிமார்களது காலத்திற்குச் சமீபத்திலுள்ளவர்களும் இந்நிலையில்தானிருக்கின்றனர். உதாரணமாக, எஹூதி நஸாராக்களை எடுத்துக்கொள்வோம். எஹூதிகள் ஏகதெய்வக் கொள்கையுள்ளவர்கள் என்றே தங்களைப்பற்றிக் கூறிக்கொள்கின்றனர். என்றாலும், இறைவனில் மனிதர்களிலுள்ள தன்மைகள் போன்றவைகள் இருப்பதாகவே அவர்கள் கருதுகின்றனர். மனிதனிலுள்ள உணர்ச்சிகள், பழக்கங்கள், மனிதக் குறைகள் போன்றவைகள் ஆண்டவனில் இருக்கக்கூடாது; இத்தன்மைகளைவிட்டு அவன் பரிசுத்தன் என்ற விஷயத்தை அடியுடன் மறந்துவிட்டனர். "ஆண்டவன் மனிதனைச் சிருஷ்டித்துவிட்டுப் பச்சாதாபப்பட்டான்; வெட்கமடைந்தான்; ஏனெனில், மனிதன் ஆண்டவனைப்போல் அல்லது ஏனைய வணங்கப்படத் தகுந்தவைகளென்று கருதப்படுபவைகளைப் போல் ஆகிவிடுவான் என்றவிஷயம் ஆண்டவனுக்குக் கிஞ்சித்தும் தெரியாது" என்று எஹூதிகள் கூறுகின்றனர். இதுமட்டுமல்ல, "ஆண்டவன் மனித உருவத்தில் தோன்றினான்; இஸ்ரவேலுடன் (அதாவது யஃகூபு அலைஹிஸ்ஸலாம் அவர்களுடன்) அவன் மல்யுத்தம் செய்தான்; இஸ்ராயீலுக்கு அவன்

பரக்கத்தைக் கொடுக்கும்வரை அவரது பிடியிலிருந்து அவன் விடுதலை பெறவில்லை.'' என்றுங்கூட அவர்கள் நம்புகின்றனர். இதனையல்லாமல், எஹூதிகள் 'பஅல்' முதலிய விக்கிரகங்களையும்கூட வணங்க ஆரம்பித்து விட்டனர்.

இனி, கிறிஸ்துவர்களைக் கவனிப்போம்: அவர்கள் கான்ஸ்டன்டைன் என்பவரது ஆட்சி காலத்தில் பழைய விக்கிரக ஆராதனையை மறுபடியும் புரிய ஆரம்பித்துவிட்டனர்; ஹஜ்றத் மஸீஹ் (அலை.) அவர்களை 'றப்பு' என்பதாகத் தீர்மானித்துக்கொண்டனர்; ஒலிமார்கள் போன்ற பெரியார்களை வணங்கத் தொடங்கி விட்டனர்; உலக முழுவதிலும் ஷிர்க்கின் பிரவாகத்தைப் பெருகச் செய்து விட்டனர். இன்று அவர்களது கோவில்களில், விக்கிரக ஆராதனைக்காரர்களது மந்திரங்களில் இருப்பது போன்ற உருவங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இதனையல்லாமல், அவர்களில் திரித்துவக்கொள்கை, சிலுவைக் கொள்கை, பாவமன்னிப்புச் செய்தல் போன்ற கொள்கைகள் பரவி இருக்கின்றன. இக்கொள்கைகள்தான் இப்பொழுது அவர்களிடம் மதத்தின் சாரமாக இருந்து வருகின்றன. ஆனால், இக்கொள்கைகள் அவர்களது மதத்தில் அஸ்திவாரமாக இருக்கவில்லை. திரித்துவக் கொள்கையின் வீணான தத்துவத்தைப் பரவச் செய்வதில் கிறிஸ்துவ உலகம் இன்று எத்துணை முயற்சி செய்து வருகிறதென்பது உங்களுக்குத் தெரியாத விஷயமல்ல. பெரும் பெரும் அரசர்களெல்லாம் இவைகளைப் பரவச்செய்வதின் முன்னணியில் இருக்கிறார்கள். இதற்காக கோடிக்கணக்கான திரவியங்கள் வருஷந்தோறும் செலவு செய்யப்படுகின்றன. குழந்தைகளின் இருதயங்களில் இவைகள் நன்கு உறம் பெறும்படி செய்யப்படுகின்றது. இதனால் அவர்கள் பெரியவர்களானபிறகும்கூட எத்தனை பலமான ஆதாரங்களைக் கண்டாலும் கூட இக்கொள்கைகள் அவர்களது மனதை விட்டகலாமல் செய்யப்படுகின்றது.

திரு குர் ஆனின் அரிய ஊழியம்

பரிசுத்த குர்ஆன் மஜீத், விக்கிரக ஆராதனை சம்பந்தமாக மூளைகளில் ஏறி இருந்த எல்லா உணர்ச்சிகளையும் வேரறுத்துவிட்டது என்பதை நீங்கள் மறுக்க முடியாது. அதன் பிரகாசம் ஷிர்க் என்ற இருளை அகற்றிவிட்டது. அதன் ஏக தெய்வ வணக்கத்தின் போதனையானது தவறான கொள்கைகள், வழிகேடான உணர்ச்சிகள் முதலியவைகளை அழித்து உலகத்திற்கு முன்னிலையில் ஆண்டவனின் ஏக தெய்வத்தன்மைக்குரிய சரியான முன் மாதிரியைச் சமர்ப்பித்திருக்கிறது.

இக் காரியம் சில ஆதாரங்களைக் கூறிவிடுவதனால் மாத்திரம் நிறைவேறிவிடாது என்பது வெளிப்படை. ஏக தெய்வ வணக்கம், ஏக தெய்வக் கொள்கை சம்பந்தமான சகல சந்தேகங்களையும் ஒவ்வொன்றாக அகற்றவேண்டியது அவசியமாகும். பலவிதமான முறைகளாலும் யுக்தி, சுருதி மூலமாகப் பல ஆதாரங்களையும் விபரித்துக்கூறி, கிரியாம்சையில் ஒவ்வொருவருடைய இருதயத்திலும் இவ்வுணர்ச்சியை நிலைநிறுத்தவேண்டும். ஆகவே, இதற்காக திருகுர் ஆனில் விதம் விதமான முறையில், மனதைக் கவரத்தக்க தோரணையில், உதாரணங்கள் மூலமாக ஏக தெய்வக் கொள்கையைப்பற்றி ஒரு முறைக்குப் பலமுறைத் திரும்பத் திரும்பக் கூறப்பட்டிருக்கிறது. மேலும், இந்தப் பிரசினையைப் பற்றித்தான் திருகுர் ஆனில் எல்லாவற்றிற்கும் அதிகமாக மடக்கி மடக்கிக் கூறப்பட்டிருக்கிறது. ஜனங்கள் அல்லாஹுதஆலாவை வீணானவன், பிரயோஜன மற்றவன் என்று கருதுகின்றனர்; அவனுக்கு இணைவைத்து வணங்குகின்றனர்; இதனை அகற்றி அல்லாஹ்தஆலாதான் போஷித்துப் பரிபக்குவப்படுத்துபவன்; அவனது வல்லமை நிகரற்றது என்று ஜனங்களை அங்கீகரிக்கச் செய்யவேண்டும் என்பது மட்டும் இவ்வாறு மடக்கி மடக்கிக்கூறி இருப்பதன் நோக்கமல்ல. அல்லாஹுத்தஆலாவைத் தவிர்த்து மற்றவர்களை வணங்குதல், தங்களது நாட்டங்களை நிறைவேற்றும்படியாக அவர்களிடம் பிரார்த்தனை புரிதல், தூரத்திலுள்ள ஸ்தலங்களுக்குச் சென்று விக்கிரகங்கள் முதலியவைகளுக்குப் பலியிடல், ஆராதனை செய்தல், அவ்வாறு செய்வதால் அவைகளின் மூலமாக அல்லாஹுத்தஆலாவினிடத்தில் நெருங்கிய அந்தஸ்தை அடைவதாகக் கருதிக்கொள்ளல் போன்றவைகள் அறிவின்மையாகும்; வழிகேடாகும் என்ற விஷயத்தை ஜனங்களுக்கு வெட்ட வெளிச்சமாகத் துலக்கிவிடவேண்டும் என்பதுதான் இவ்வாறு அதிகமாகத் திருப்பித் திருப்பிக் கூறியிருப்பதன் நோக்கம்.

சில வருஷங்களுக்குமுன் பனிக்காலத்தில் மிகக் கடுமையான மூடுபனி உண்டாயிற்று. அநேக இடங்களில் பனிக்கட்டிகள் விழுந்தன.

பெருஞ் சேதங்களு மேற்பட்டன. ஆனால், எகிப்தில் இம்மாதிரியான அதிக சேதமெதுவு மேற்படவில்லை. இதனைக் குறித்து எகிப்தியரில் அநேகர் "எகிப்து தேசத்தில் இன்னின்ன பெரியார்களது மஜார் (கப்று)களிருக்கின்றன, இதனால்தான், அங்கு சேதமேற்படவில்லை" என்று கூறினர்.

இந்தியாவில் சில ஆண்டுகளுக்குமுன் பெரும் பூமி அதிர்ச்சிகள் உண்டாயின. இதனால் ஆயிரக் கணக்கான கட்டிடங்கள் இடிந்து தரைமட்ட மாகிவிட்டன. சில கோவில்களும் சிவாலயங்களும் இடியாமல் இருந்தன. இதனைக் குறித்து விக்கிரக ஆராதனைக்காரர்கள் "இவ் விக்கிரகங்களை வணங்குவதில் இறைவனுக்குத் திருப்தி இருக்கிறது; இவைகளின் ஞாபகார்த்தங்கள் அழியாதிருக்க அவன் விரும்புகிறான்; ஆதலால்தான், அவைகள் அழியாவண்ணம் காப்பாற்றினான்" என்று கூறினார்கள். கட்டிடங்கள் உறுதியாகக் கட்டப்பட்டிருந்தால் தகர்ந்து போகாமல் இருப்பது சகஜம். அநேக கட்டிடங்கள் எத்தனையோ விபத்துக்களுக்குள் சிக்கியும் ஆயிரக்கணக்கான வருஷங்களாக இடியாமல் இருந்து வருகின்றன. இப்படி இருப்பது காாமத்து மல்ல, வேறுவிதமான அற்புதமுமல்ல. இவ்விதமான நம்பிக்கைகளெல்லாம் மனிதர்களிடம் இருக்கக்கூடாது என்பதற்காகவே, திருகுர்ஆனில் பற்பலவிதமாக ஏக தெய்வக்கொள்கையைப் பற்றி மிக அதிகமாகத் திரும்பத் திரும்பக் கூறப்பட்டிருக்கிறது.

மனிதரது இருதயங்களில் ஆண்டவன்பால் அன்பும் பக்தியும் ஏற்படவேண்டும் என்பதற்காக விவாகம், விவாக விலக்கு, பாகப்பிரிவினை, ஜிஹாது, கடன், வியாபாரம் முதலிய சகல காரியங்களையும் பற்றிக்கூறுமிடங்களிலும் கூட ஆண்டவனது திருநாமங்கள் பற்பலவிதமாக மனதைக் கவரும் தோரணையில் அழகாகக் கூறப்பட்டிருக்கின்றன. இவ்வாறான அழகிய திருநாமங்கள் மாறி மாறிச் சொல்லப்படுவதால் ஆண்டவன் மீது மனிதருக்குப் பக்தியும் அன்பும் உண்டாகின்றன; மனித இருதயங்களில் ஆத்மார்த்த ஜீவனுக்குள்ள ஊற்றுகள் தோன்றுகின்றன; அறிவுகளில் மெய்ஞ்ஞானப் பிரகாசங்கள் ஜொலிக்கின்றன. உட்காரல், எழுந்திருத்தல் முதலிய சகல காரியங்களிலும் அல்லாஹுத ஆலாவின் நாமத்தைக்கூறும்படி திருகுர்ஆன் போதித்திருக்கிறது. இதற்குக் காரணம் அல்லாஹுதஆலாவின் தாத்து, ஸிபாத்துகளைப்பற்றிய உணர்ச்சி மனிதரின் சகல செய்கைகளிலும் பதிந்துவிடவேண்டும் என்பது தான். இதன் பலனாக அறபியர் மூடநம்பிக்கை, தவறான எண்ணம் முதலியவைகளை விட்டுப்பரிசுத்தர்களாயினர்; அவர்களது இருதயங்கள் விக்கிரக ஆராதனை என்ற அசங்கிதத்தை விட்டுச் சுத்தமாயின. இது போலவே, திருகுர்ஆனின் பிரகாசத்தினால் வெளிச்சமடைந்த அறபியல்லாதவரின் இருதயங்களும் கூடச் சுத்தமாகிவிட்டன; சிறந்த நல்லொழுக்கங்களும் திறமைகளும் உண்டாயின.

"திருகுர்ஆன் சமர்ப்பித்த ஏக தெய்வக் கொள்கை மனிதன் சகலவிதமான நிபுணத்துவத்தையும் உயர்வையும், பெருமையையும் அடைவதற்கான ஊற்றுக்கண்ணாக இருக்கிறது; இது ஒன்றின் மூலமாகவே, மனிதன் யுக்தி, அறிவு, ஆத்மார்த்தம், நாகரீகம் முதலியவைகளில் முன்னேற்றங்களை அடைய முடியும். இஸ்லாத்தின் ஏகதெய்வக்கொள்கை சாதாரணமான ஒரு கொள்கையாகும்; யுக்திக்கும் புத்திக்கும் பொருத்தமானதாகும். இதனால் தான் எல்லா சமூகத்தினரும் அதனை ஒப்புக்கொள்ள வாரம்பித்து விட்டனர்; இஸ்லாத்தின் முன் கிறிஸ்துவ சமயம் தோல்வியடைய நேர்ந்தது" என்பதாக ஐரோப்பிய ஆசிரியர்களில் பெரும்பாலர் கூறி இருக்கின்றனர். சங்கைவான்களான ஸஹாபிகளிடம் இதே தவ்ஹீதும், தெய்வ பக்தியும், நம்பிக்கையும், தவக்குலும் ததும்பிக்கொண்டிருந்தன. இவ்வுணர்ச்சிகளால்தான் முஸ்லிம்களது ஹிருதயங்களிலிருந்த சகலவிதமான பயத்தையும், பேராசைகளையும் அவர்கள் நீக்கினார்கள்; அவர்களுக்குத் துணிவுண்டாகி இருந்தது. அவர்களில் சுயநம்பிக்கை, சுயமுயற்சி, வீரம் ஆகியவை நன்கு உண்டாகியிருந்தன. அவர்களது ஹிருதயங்கள் நீதி நியாயம் ஆகியவைகளில் ஸ்திரமாக இருந்தன. அல்லாஹுத ஆலாவின்மீதும், அவனது கட்டளைகளின் மீதும் திருப்தியடைந்திருந்ததின் பயனாக ஸஹாபிகள் நூற்றுக்கணக்கான அரசாங்கங்களை வென்றனர். அநேக தேசத்தினரின்மீது ஆதிக்கம் செலுத்தினர். குறி சொல்பவர், கோடாங்கி சொல்பவர், பாதிரிகள் முதலியவர்களுக்கு அடிமைகளாக இருப்பதைவிட்டு அவர்கள் மனிதரைக் காப்பாற்றினர். அநியாய அக்கிரம அரசர்களது அட்டூழியங்களை அழித்தனர். நாகரீகம், முன்னேற்றம் என்ற தூண்களை

செவ்வையாக்கினார்கள். அழிந்துபோன கல்விகளையும் கலைகளையும் உயிர்ப்பித்தனர். சில வருஷங்களுக்குள் அபார முன்னேற்றத்தை அடைந்தனர். இதற்கு நிகர் உலகிலுள்ள வேறெந்தச் சமூகத்திலும் இல்லை. இதனைக் குறித்து பிரபல ஐரோப்பிய சரித்திரக்காரரான டாக்டர் கோஸ்டாப்லீபான் என்பவர் பின்வருமாறு கூறியிருக்கிறார்:—

"முன்னேற்றமடையும் ஒவ்வொரு சமூகத்தினருடைய கல்விகளும் வித்தைகளும் மூன்று தலைமுறைகளில் பூர்த்தியடைகின்றன. முதலாவது தலைமுறையில் மற்றவர்களைப் பார்த்து, அவர்களைப்போல் நாமும் நடந்துகொள்ளும் உணர்ச்சியுண்டாகின்றது. இரண்டாவது தலைமுறையில் சுய அபிப்பிராயம், ஆராய்ச்சி முதலிய எண்ணங்களுண்டாகின்றன. மூன்றாவது தலைமுறையில் சுய உணர்ச்சி, சிந்தனா சக்தி ஆகியவைகள் பிரத்தியேகமாக ஸ்திரப்படுகின்றன, அச்சமூகம் முஜ்தஹிதேமுத்லக்கின் அந்தஸ்தை அடைந்து விடுகிறது. ஆனால், உலகில் அறபி சமூகம் ஒன்றுமட்டும்தான் இப்பொது விதியைவிட்டு விலக்காக இருக்கிறது. அச்சமூகத்தில் எந்தத் தலைமுறையில் கல்விகளும் வித்தைகளும் தோன்றினவோ, அதே தலைமுறையிலேயே அவைகள் பரிபூரண நிலைமைக்கு வந்துவிட்டன."

இவ்விதமான மாறுதலுக்குரிய ஒரே ஒரு காரணம் திருகுர்ஆன்தான் என்று நான் உறுதியாகக் கூறுவேன். திருகுர்ஆன் அறபியரில் அறிவுச் சுதந்திரத்தையும், சுயேச்சையான சிந்தனா சக்தியையும் உண்டாக்கி விட்டது. குருட்டுத்தனமாகப் பின்பற்றுவதை அற்பமாகத் தோன்றும்படிச் செய்தது. அதனை அவர்கள் மிகக் கேவலமாக மதித்தனர். தீன், துன்யா ஆகிய இரண்டின் சகல பிரச்னைகளிலும் மனிதர்களுக்கு வழிகாட்டுவதற்காகவே அவர்கள் தோன்றியதாக அவர்கள் உள்ளத்தில் உணர்ச்சி ததும்பிக்கொண்டிருந்தது. ஆனால், இஸ்லாமிய கிலாபத்தும், அறபி எழுச்சியும் நீங்கிய பின்னர்தான் இம்முன்னேற்றங்களெல்லாம் அழிந்தன. ஏனெனில், இஸ்லாமிய அரசாங்கத்தின் சூக்ஷக்கயிறு அவர்களை விட்டு அஜமியர் வசம் வந்தது. இந்த அஜமிகள் இஸ்லாத்தின் புற ஆசாரங்களைப் பின்பற்றுபவர்களாகவும் தௌஹீதின் முக்கிய நோக்கத்தையும் திருகுர்ஆன் காட்டியுள்ள நேர்வழியையும் உணராதவராகவும் இருந்தனர்.

ஆகவே, நாம் முன்னேற்றமடையவேண்டுமானால் தவ்ஹீதைச் சரிவர உணர்ந்து, திருகுர்ஆனின் கட்டளைகளின்படி தவறாமல் நடக்க வேண்டும். எல்லாம் வல்ல இறைவன் இத்துறையில் நமக்கு நேர்வழி காட்டிச் சீராய் நடத்துவானாக. ஆமீன்.

கமால் பாஷா ஆக்கிய நவீனத் துருக்கி

புதுத் துருக்கியின் சிருஷ்டி கர்த்தா, துருக்கியர்த் தந்தை, வீராதி வீரர், ராஜீய நிபுணர், அரசியல் தந்திரி, காஜீ முஸ்தபா கமால் பாஷா அவர்கள், சிலநாள் பிணிவாய்ப்பட்டிருந்து சென்ற 10-11-38 காலை இத்தரணியை நீத்துக் காலஞ் சென்றமைக்கு, இவ்வுலக முஸ்லிம்கள் யாவரும் அளவிடா துக்க சாகரத்திலாழ்ந்துளரென்பதில் ஐயமில்லை. எல்லாம் வல்ல இறைவன் அவரது ஆன்மாவுக்கு சாந்தியருள்வானாக.

இக்காலை முஸ்லிம் உலக அரசாங்கங்களில் இஸ்லாத்தின் கௌரவத்தையும், முஸ்லிம் சமூகத்தின் கீர்த்தியையும் நிலைநாட்டிக்கொண்டிருப்பது துருக்கி வல்லரசாங்கமேயாகும். ஐரோப்பிய வல்லரசாங்கங்கள் இக்காலை முஸ்லிம்களை ஒரு பொருட்டாய் பாவித்து சமத்துவமாய் நடத்துவதற்கு காரணபூதராய் இருந்தவர் காஜீ முஸ்தபா கமால் பாஷாவேயாவர். துருக்கி இன்று இத்துணை மேன்மையும் முன்னேற்றமும் அடைந்ில்லாதிருப்பின், ஐரோப்பிய கிறிஸ்துவ வல்லரசாங்கங்கள் முஸ்லிம் சமூகத்தை ஆங்காங்கு ஒடுக்கி சின்னா பின்னப்படுத்தி விட்டிருக்கும். கமால் பாஷாவின் முயற்சியாலும், துருக்கியின் மாட்சியாலும், எல்லாம்

வல்ல இறைவன் முஸ்லிம் சமூகத்தின் கௌரவத்தை இத்தரணியில் நிலைநாட்டி வைத்திருப்பதற்கு அவ்வல்லோனைப் போற்றிப் புகழ்ந்து துதிப்போமாக!

கமாலின் ஜீவியம்

முஸ்தபா கமால் பாஷா 1880-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ந் தேதி, துருக்கியின் சிற்றூராகிய ஸ்லோனிகாவில் ஏழைக் குடும்பத்தில் பிறந்தார். தந்தை பெயர் அலிரிஜா. தாயார் பெயர் சுபேதா. கமால் பாஷா பால்யத்தில் கல்வி ஞானம் அதிகம் பெறவில்லை. முரட்டுப் பிள்ளையாய் முரட்டு சுபாவத்தில், கல்வியில் பிரியமில்லாதிருந்தார். அவரது குணசுபாவப்படி ராணுவத்தில் சேர்ந்து பயிற்சி பெற்றார். பொது ஜனங்கள் சகாயத்தைப் பெற்று வாலிபக் கோஷ்டியை, தமக்கு சாதகமாய் திரட்டிக் கொண்டார். இறுதியில் பல புரட்சிகள் செய்து அரசாங்க காரியங்களில் தலையிட்டு, சுல்தான்களை நீக்கிவிட்டு கிலாபத் ஆட்சியை ஒழித்து, குடியரசாட்சியை ஏற்படுத்தினார். இறுதியில் தானே துருக்கியின் பிரஸிடெண்டாகி, தற்போதுள்ள நவீனத் துருக்கியை சிருஷ்டித்து வைத்துச் சென்றார்.

கமால் பாஷா, சாதாரண குருட்டு அதிருஷ்டத்தால் துருக்கியின் தலைவராய் விடவில்லை. இளமை முதலே உழைத்துப் பாடுபட்டு, தேசபக்தியினால் பல தியாகங்கள் பூண்டு, இஸ்லாமியப் பற்றினால் பல தொண்டுகள் இயற்றி, நாட்டையும் சமூகத்தையும் காப்பாற்றியதாலேயே அவரை உலகம் "அதாதுர்க்" (துருக்கியின் தந்தை) என்றழைக்கிறது.

கமால் பாஷா மகா யுத்தத்தில் தமது வீரத் துணைவர்களோடு, ஐரோப்பியப் பட்டாளங்களை சின்னாபின்னப்படுத்தி விரட்டியடித்தார். கிரேக்கர், பிரிட்டிஷார், இத்தாலியர்—யாவரும் கமாலின் வீரத்தின்முன் எதிர்த்து நிற்க மாட்டாமல் புறமுதுக் காட்டி ஓடியதுண்டு. அதன் பிறகு பகையினால் அவ்வரசுகள் சேர்ந்து சதிசெய்து துருக்கியைப் பங்குபோட்டுக்கொள்ளப் பார்த்தன. ஆனால், அவ்வாறாகாமல் இஸ்லாத்தின் பெயரை ஆண்டவன் காப்பாற்றினான்.

தற்காலத் துருக்கி.

தற்காலத் துருக்கியை புதுமை மிகுந்த துருக்கியெனலாம். 20-வருடங்களுக்கு முன்னிருந்த "நோயாளி நாடல்ல" இப்போதுள்ள துருக்கி. துருக்கியர் இதுகாலை சகல துறைகளிலும் மேன்மையுற்று விளங்குகிறார்கள். தற்கால நவீனத் துருக்கியைப்பற்றிய சரியான வரலாறுகள் பத்திரிகைகளிலே சாதாரணமாய் வெளி வருவதில்லை. நம் கீழ்நாட்டுப் பேரறிஞர் ஒருவர், சமீபத்தில் துருக்கி தேசத்துக்கு யாத்திரை சென்று திரும்பி வந்துள்ளார். அவர் தாம், துருக்கியில் நேரில் கண்ட காட்சிகளையும், அற்புத நிலைமைகளையும், பழைய துருக்கிக்கும் புதிய துருக்கிக்குமுள்ள வித்தியாசத்தையும் பிரத்தியக்ஷமாய் எடுத்துக் கூறுகின்றார். அதனை நம் வாசகர்களின் பார்வைக்காக இங்கெடுத்துக் கூறுவாம். (ப-ர்.)

நான் கண்ட துருக்கி

நம் ஹிந்துஸ்தானத்திலே வெகு சிலர் தான் துருக்கியின் உண்மை வரலாறுகளை அறிந்திருப்பவர்களாய் காணப்படுகின்றனர். நான் ஹிந்துஸ்தானத்தில் பல பத்திரிகைகளில் துருக்கிச் செய்திகளைப் படித்திருக்கிறேன். ஒன்றிலாவது உண்மைத் துருக்கியின் வரலாறுகள் எடுத்துக் கூறப்படுவதில்லை. மேலும் சில பத்திரிகைகள், துருக்கியில் இஸ்லாமிய நாமதேயமே கிடையாதென்றும், துருக்கியின் ஆசாரப் பழக்க வழக்கமெல்லாம் ஐரோப்பிய கிறிஸ்துவர்களைப்போல் மாறிவிட்டதென்றும், துருக்கியருக்கு மத பக்தி கிடையாதென்றும் கயிறு திரித்துவிட்டு, கண்ட கண்டபடியெல்லாம் எழுதி உலக முஸ்லிம்களிடையே துருக்கியின் கௌரவத்தைக் குலைத்து வருகின்றன. இதையெல்லாம் யான் கண்டு வருந்தாமலிருக்கவில்லை.

ஆனால், நான் துருக்கிக்குச் சென்று 'அன்கரா' நகரை நேரில் கண்டதும் என்னுடைய சந்தேகங்களெல்லாம் நிவர்த்தியாகி விட்டன. இந்தியாவில் துருக்கியைப்பற்றிக் கூறப்படும் கதைக்கும், அங்கு நேரில் காணப்படும் நிலைமைக்கும் வானத்துக்கும் பூமிக்குமுள்ள வித்தியாசத்தைக் கண்டேன். எனவே, அங்கு நான் நேரில்கண்ட காட்சிகளையும், ஜனங்களின் வாழ்க்கை முறைகளையும் இங்கு சவிஸ்தாரமாக எடுத்துக்கூறி உண்மைத் துருக்கி நிலை இன்னதென்பதை பகிரங்கமாய் எடுத்துக் கூறிவிட விரும்புகிறேன். நேயர்கள் படித்துப் பயன் பெறுவார்களாக.

துருக்கியின் நாகரிகம்

தற்காலத் துருக்கியின் நவீனக் காட்சிகளையும், முன்னேற்றச் சாதனங்களையும், மக்களின் உயரிய வாழ்வு முறைகளையும் எடுத்துக் கூறுவதற்குமுன்னால், இத்தியாதி முன்னேற்றங்களை துருக்கியர் எங்ஙனம் அடைந்தனர்? அவர்களின் பண்டை நிலையென்ன? கிலாபத் ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில் துருக்கி எத்துணை சீர்கேட்டில் கிடந்தது?—ஆகியவைகளை முன்னுரையாக இங்குக் கூறவேண்டியதாயிருக்கிறது.

இக்காலை ஐரோப்பா தேசம் எத்துணை நவீன நாகரீகமும், விஞ்ஞான முன்னேற்றமும், புதுமைச் சாதனங்களும் உடையதாயிருக்கிறதென்பதை நேயர்கள் அறிவார்கள். அந்தப் புதுமைகளுக்குப் பெயர்தான் "புது யுகம்" என்றும், "நவீன நாகரிகம்" என்றும் கூறப்படுகிறது. இக்காலை, துருக்கியும் இத்தகைய 'நவீன நாகரிகம்' பெற்று, புது யுகத்தில் திளைத்து வாழ்ந்து வருகின்றது.

இத்தகைய நாகரீகத்திற்குத் துருக்கி பிரவேசிப்பதற்குமுன், துருக்கி மிக சீர்கேடான நிலைமையில் கிடந்தது; கல்வியிலும்; ஒழுக்க வழக்கத்திலும் மிகத்தாழ்வான நிலையில் கிடந்தது. அக்காலை, கல்வி ஆராய்ச்சி யென்பது எல்லோருக்கும் பொதுவான சொத்தாகயிருக்கவில்லை. இராஜ வம்சத்தினரும், உயர் குலத்து மக்களும், பெருமித பணக்காரர்களும் மட்டும் தான் கல்வியாராய்ச்சி யுடையவர்களாயிருந்து வந்தனர். கல்வி கற்கவேண்டுமென்ற எண்ணம் பாமரர் மனதில் உதிக்குமாயின், அக்காலை அது ஒரு பேராச்சரியமாகவே கருதப்பட்டுவந்தது. ஆதலின், அக்காலை துருக்கி முழுதும் அஞ்ஞான அந்தகாரம் சூழ்ந்துக்கொண்டு எங்கும் முரட்டுப் புத்தியும் அசட்டுத்தன்மைகளும் தலைவிரித்தாடிக் கொண்டிருந்ததெனலாம்.

புரட்சி உதயம்

புரட்சித் தோன்றாமல் துருக்கித் தேசம் மேன்மைக்குவர மார்க்கமில்லை என்ற நிலைமையேற்பட்டது. துருக்கியை அந்த காரத்திலிருந்து காப்பாற்றி பிரகாசத்தின் பக்கல் கொண்டுவரவேண்டுமென்று, தீவிர நோக்கங் கொண்ட கோஷ்டியார் கிளம்பினர். அந்த கோஷ்டிக்குத் தலைமை வகித்தவர் காஜீ முஸ்தபா கமால்பாஷா ஆவர். அக்காலை அவர் சாதாரண ராணுவ சிப்பாயாகவேயிருந்தார். ஆனால், அவர் மனமும் உள்ளமும் மகா பரிசுத்தமாய் இருந்தது. எனவே, அவருக்கு நிறைய செல்வாக்கும் பக்கபலமும் கிடைத்தது. பழைய மௌடீகத்தன்மைகளை வெறுத்த வாலிபக் கோஷ்டிகள் கமால் பாஷாவை தங்கள் தலைவராய்க் கொண்டனர்.

சுல்தான் ஆட்சி

அக்காலை துருக்கியில் (பொதுப்படையாய் அராபிய நாடுகளில்) சுல்தான்களுடைய ஏதேச்சாதிகாரமே நடைபெற்றுக் கொண்டிருந்தது. சுல்தான் இட்டதே சட்டமாய் இருந்துவந்தது. சுல்தானுடைய இஷ்டத்துக்கு விரோதமாய் ஒருவரும் நடந்து கொள்ளமுடியாது. மார்க்கக்கல்வி பயின்ற ஆலிம்—உலமாக்களின் பக்க பலம் சுல்தான்களுக்கு சாதகமாயிருந்து வந்ததால், பாமரர்களெல்லோரும் ஆலிம் உலமாக்களின் கட்டளைப்பிரகாரமே நடந்து கொள்ளவேண்டியவர்களாயிருந்தனர்.

அக்காலை சுல்தான்கள் தங்கள் சுகபோக இன்ப ஆனந்தங்களிலேயே சதா சர்வகாலமும் ஆழ்ந்து கிடந்தார்களே யல்லாமல், இஸ்லாத்தை அபிவிருத்தி செய்யவேண்டுமென்றோ, சமூகத்தை மேன்மையுறச் செய்யவேண்டுமென்றோ அவர்கள் ஒருசிறிதும் சிந்தனைக் கொள்வதில்லை.

சுல்தான், அக்காலை அகில உலக இஸ்லாமிய மக்களுக்குத் தலைமையாக கலீபா பதவியில் வைக்கப்பட்டிருந்தார். கலீபாவின் உத்தரவை எல்லா முஸ்லிம்களும் ஏற்று நடக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தமிருந்து வந்தது. மஸ்ஜிதுகளிலும், மத்ரஸாக்களிலும் வெறும் குர்ஆனும், வைதீகக் கல்வியும் மட்டுமே கற்பிக்கப்பட்டு வந்தன. உலக ஆராய்ச்சிக் கல்வியும், விஞ்ஞானமும் அக்காலை இஸ்லாத்துக்கு விரோதமான படிப்புகளாய், நாஸ்தீகத்தைப் புகட்டும் கல்வியாய் கருதப்பட்டு முற்றும் பகிஷ்கரிக்கப்பட்டு வந்தது. இதனால் மக்கள், உலக ஆராய்ச்சியின்றி முற்றும் மௌடீகத்தில் ஆழ்ந்து, மூடர்களாகவும் வீணர்களாகவும் வாழ்ந்து வந்தார்கள்.

துருக்கி ராணுவத் தோல்வி

அக்காலை ஆட்சிபுரிந்துவந்த சுல்தானுடைய ஆட்சியை உதுமானிய அரசாட்சியென்று கூறிவந்தார்கள். உதுமானியர்கள் ராணுவப் பயிற்சியில் மகா மோசமான நிலைமையில் கிடந்தார்கள். நவீனமுறைகள், ராணுவங்களைத் தொகுப்

பது, யுத்த ஆயுதங்களைக் கையாளுவது ஆகிய துறையிலும் உதுமானிய ஆட்சியினர் மகா சீர்கேடடைந்து, தாழ்வான நிலைமையில் கிடந்தார்கள்.

இதெல்லாம் 18-வது நூற்றாண்டின் நிலைமை. 18-வது நூற்றாண்டில் உதுமானியப் பட்டாளங்களுக்கும், ருஷ்யர்களுக்கும் ஒரு யுத்தம் நடைபெற்றது. 8,000 ருஷ்ய வீரர்கள், 120,000 உதுமானிய (துருக்கி) பட்டாளங்களை முறியடித்து வீழ்த்தி விட்டார்கள். டெனியூர் நதியைக்கடந்து, எதிரிகள் துருக்கிக்குள் பிரவேசித்து விடுவார்களோவென்ற நிலைமை ஏற்பட்டு விட்டது. அக்காலை (அதாவது முஸ்தபா கமால் தோன்றுவதற்குமுன்னால்) துருக்கி எத்துணை க்ஷீணகதியடைந்திருந்த தென்பதற்கு மேற்படி வரலாறு ஓர் உதாரணம்.

நவீன ராணுவப் பயிற்சி

ருஷ்யரிடம் துருக்கியர் தோல்வியடைய நேரிட்ட பிறகுதான், அன்னிய அரசாங்கங்களுக்கு நிகராக தங்கள் ராணுவத்தை நவீன முறையில் பயிற்சியளிக்க வேண்டுமென்ற அக்கறை துருக்கியருக்கு ஏற்பட்டது. எனவே, 1826-ம் ஆண்டில் சுல்தான் முஹம்மத் என்ற அதிபர் தன்னுடைய ராணுவங்களுக்கு, மேல் நாட்டு ராணுவ வழக்கப்படி நவீனப்பயிற்சியளிக்கத் தொடங்கினார். 1839-ல் மேற்படி ஏற்பாடு ஒருவாறு நல்ல நிலையடைந்து, புதிய தோற்றம் காணப்பட்டது. துருக்கியர் கட்டுப்பாட்டுக்குள்ளாகி, தங்களைத் தாங்களே காத்துக்கொள்ள வேண்டுமென்ற உணர்ச்சி பெற்றார்கள்.

நவீன ராணுவப்பயிற்சிக்காக 1839-ல் பயிற்சி ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப்பட்டன. எனவே, ஒழுங்கான முறையில் வாலிபர்களுக்கு இராணுவப் பயிற்சி அளிப்பதற்காக வென்று, "இராணுவக் காலேஜ்" ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதில் அநேக வாலிபர்கள் சரியான சிப்பாய்களாகவும், நவீன ஆயுதங்களை உபயோகிக்கும் ஆற்றலுடையவர்களாகவும் தயாரானார்கள்.

இதர துறை யபிவிருத்திகள்

ராணுவத்தில் துருக்கியர் புதுப்பயிற்சியும் அபிவிருத்தியும் அடைந்ததுபோல், இன்ஜினீயரிங் கல்வி, வைத்திய டாக்டரிங் பயிற்சி, நவீன சாதனங்களைக் கண்டுபிடிக்கும் விஞ்ஞானம் ஆகிய துறைகளிலும் துருக்கியர் பிரவேசிக்கலானார்கள். இதற்காக இன்ஜினீயரிங் கலாசாலை, டாக்டரிங் ஸ்கூல், ஆராய்ச்சிக்கூடம் யாவும் 1840-ல் ஸ்தாபிக்கப்பட்டன. இதன்பின் புதுக்கல்வியும், நவீன ஆராய்ச்சிகளும் விருத்தியடைய, துருக்கி அரசாங்கக் காரியங்கள் வலுப்பட ஆரம்பமாயிற்று.

ஸுல்தான் அப்துல் அஜீஸின் வீழ்ச்சி

அதன்பின் துருக்கியில் ஐரோப்பிய போதனாமுறைத் திட்டப்படி, கல்விப் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. மேனாட்டு முறைப்படி பல பாடசாலைகள் நடத்தப்பட்டு வந்தன. மத்ரஸாக்கள் ஸ்கூல்களாக மாற்றப்பட்டன. இவ்வாறாக துருக்கியில் ஒவ்வோர் துறையிலும் மேனாட்டு நாகரீகம் வந்து புகுந்துகொண்டு விட்டது. பழைய போதனா புத்தகங்களையெடுத்துவிட்டுப் புதுவிதமான புஸ்தகங்கள் இயற்றப்பட்டன. எனவே, துருக்கிய இலக்கியம் மேனாட்டு இலக்கியமாக மாறத் தலைப்பட்டு விட்டன.

அப்போது துருக்கியை அரசாட்சி புரிந்து கொண்டிருந்தவர் ஸுல்தான் அப்துல் அஜீஸாவர். புதிய சீர்திருத்தங்களை தீவிரமாய் அமலில் கொண்டு வந்த கோஷ்டியார், நவீன நாகரீகத்துக்கு விரோதமாயிருந்து வந்த ஸுல்தான் அப்துல் அஜீஸை பட்டத்தைவிட்டும் இறக்கி விட்டார்கள். அரசப்பதவியை பறித்துக்கொண்டது மல்லாமல், சுல்தானுடைய எல்லா சொத்துக்களையும் பொக்கிஷங்களையும் அபகரித்துக்கொள்ள முற்பட்டார்கள்.

ஸுல்தான் அப்துல் ஹமீது

அதன்பின், நாட்டின் க்ஷேமாபிவிருத்தியைக் கருதி சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. அச்சீர்திருத்தத்துக்குப் பெயர் "கானஸி டியூஷன்" என்பதாம். இத்தகைய சீர்திருத்தம் ஏற்பட்ட காலம் கி. பி. 1877-ம் ஆண்டாகும். இந்தச் சீர்திருத்தம் கொஞ்சகாலம் ஒழுங்காகவே நடைபெற்று வந்தது. இதை "சிகப்பு சுல்தான் ஆட்சி" யென்று அக்காலை சொல்லப்பட்டு வந்தது. இந்த ஆட்சி சுமார் 30-வருடங்கள் வரை நடைபெற்று வந்தது.

1908-ம் ஆண்டில் மேற்படி சீர்திருத்த ஏற்பாடுகளும் ஒழிந்து விட்டன. இக்காலை துருக்கியை அரசாண்டு கொண்டிருந்தவர் ஸுல்தான்

அப்துல் ஹமீதுகானவர். இவர் முன்னைய சுல்தான்களைப் போல் அத்துணை முழு மோசமாக உழலாவிடினும், நாட்டு நலனை முன்னிட்டு சில புதிய சீர்திருத்தங்களைச் செய்து வந்தார். இந்த சீர்திருத்தம் பிரான்ஸ் புரட்சியை பின்பற்றி செய்யப்பட்டிருந்தன. இவர் சில கோஷ்டிகளையும் ஏற்படுத்தியிருந்தார். இந்தக் கோஷ்டியினர் தேச நிலையை அபிவிருத்தி செய்ய பலவித பொருளாதார மார்க்கங்களை அனுஷ்டித்து வந்தார்கள். இது தீவிர ஐக்கிய ஆட்சி யென்று பாராட்டப்பட்டது.

மீண்டும் புரட்சிகள்

அக்காலை சுல்தான் அகில இஸ்லாமிய உலகத்துக்கும் கலீபாவாக கருதப்பட்டு வந்தார். "ஷெய்குல் இஸ்லாம்" என்றொரு பதவியிருந்தது. ஆலிம்களில் மிகச்சிறந்த மதிப்புடையவர் இந்த ஸ்தானத்தில் அமர்த்தப்பட்டிருந்தார். இவரும், பிரதம மந்திரியுமே எல்லா விவகாரங்களுக்கும் அதிபதிகளாகயிருந்தனர். இவர்கள் எந்த விவகாரத்தையும் மதத்துக்கு முரண் இல்லாமலிருக்கிறதா வென்று பார்த்து நடந்துகொள்வார்கள்.

ஷெய்குல் இஸ்லாமுடைய இஷ்டத்துக்கு விரோதமாய் ஒருவரும் அக்காலை மூச்சு விட முடியாது. ஷெய்குல் இஸ்லாம் ஏற்படுத்திய அரசியல் ஏற்பாடுகளுக்கு பணம் ஏராளமாய் செலவாகி வந்தது. அவரது அமிதச் செலவுகளுக்கு அரசாங்கப் பொக்கிஷத்தில் பணம்போதவில்லை. ஷெய்குல் இஸ்லாம் பழையபடி துருக்கியை பிற்போக்கிலாக்கிவைக்க பிரயத்தனப்பட்டார். புதிய ஐரோப்பிய முறைக்கல்வியை எடுத்துவிட்டு வைதீகக் கல்வியை ஸ்தாபிக்க பாடுபட்டார். இவ்வித தான்றோன்றித் தன்மைகளால் ஸ்தம்பூல் நகர மக்களின் வாழ்க்கை முறை சின்னா பின்னப்பட்டு விட்டது.

கமால் பாஷாவின் தோற்றம்

நாடும், தேச மக்களின் வாழ்வும் சீரழிக்கப்படுவதைக்கண்டு, துருக்கி மக்களில் ஒரு சாரார் சகிக்கவில்லை. வாலிபக் கோஷ்டியார், தேசத்தை ரக்ஷித்துக் காப்பாற்ற வேண்டி வெளிப்பட்டுத் தீவிரமாய் முன்வந்தனர். இவர்களுக்கு காஜீ முஸ்தபா கமால் பாஷா தலைமை வகித்தார். அக்காலை கமால் பாஷா இளைஞராகவும், சுறுசுறுப்பான ஞானமுடையவராகவும், மிகுந்த பலசாலியாகவு மிருந்தார். பழைய ஏற்பாடுகளை வெறுத்த சீர்திருத்தக் கோஷ்டியார், முற்றும் கமால் பாஷாவைப் பின்பற்றி நடக்கலாயினர்.

இவ்வாலிபக் கோஷ்டியார் சிறுகச் சிறுக துருக்கியின் அரசியல் துறைகளை யெல்லாம் சீர்திருத்திவந்தார்கள். அதற்கேற்ப, கமால் பாஷாவின் மதிப்பும் செல்வாக்கும் அதிகரித்து வந்தன. எனவே, கொஞ்ச நாளில் துருக்கு காப்பாற்றப்பட்டு விட்டது; ஷெய்குல் இஸ்லாமுடைய எதேச்சாதிகாரம் ஒழிந்தது. சுல்தான், வெளிப்பட்டு விட்டார். குடியரசாட்சி முறை அனுஷ்டானத்துக்கு வந்தது. எல்லாம் நவீன நாகரிகமாய் மாறி விட்டது. எனவே, சகலத்துக்கும் கமால்பாஷா அதிபரானார்.

இஸ்லாம் அழியவில்லை

கமால் பாஷாவின் குடியரசாட்சி முறையும், நவீன நாகரிகமான புதிய சீர்திருத்தங்களும் ஏற்பட்டு விடவே, பிற்போக்காளர் சிலர் எதிரிடையான கிளர்ச்சி புரியலாயினர். துருக்கியில் இஸ்லாமிய ஆசாரம் அழிந்து போய்விட்டதாகவும், துருக்கியர் கிறிஸ்துவர்களைப்போல் மாறி விட்டதாகவும், பல அபவாதங்கள் கிளம்பின. உண்மையில் கமால் பாஷாவின் ஆட்சியால் இஸ்லாமிய வாழ்வு ஒரு சிறிதும் பாதிக்கப்படவில்லை. ஆனால், ஐரோப்பிய தேசத்தாருக்கு இணையாக தம் துருக்கி சமூகத்தை அணிவகுத்து நிறுத்த வேண்டுமென்ற நன்னோக்கங் கொண்டேதான், காஜீ முஸ்தபா கமால், நடையுடை பாவனைகளை ஐரோப்பியர்களுக்கொப்ப மாற்றியமைத்தார். ஆனால், மஸ்ஜிதுகளில் நடைபெறும் தொழுகை, வணக்கம், குர்ஆன் ஓதுதல் முதலிய கருமங்கள் முன்னிலும் நல்ல விதமாய் நடைபெற்று வந்தது. பழைமைபோய் புதுமை அனைத்திலும் ஏற்பட்டது.

நான்கண்ட காட்சிகள்

அதா துர்க்கி கமால் பாஷாவின் ஆட்சியினால் இஸ்லாமிய ஆசாரம் சீர் அழிந்து விட்டதென்ற பேச்சை நான் சந்தேகப்பட்டு நம்பிக்கொண்டு தானிருந்தேன். ஆனால், தற்காலத் துருக்கியை நேரில் கண்டபின்னர் தான் துருக்கியில் இஸ்லாமிய ஆசாரம் முன்னைவிட நல்ல ஸ்திதியில் செழித்தோங்கி யிருக்கிற தென்பது நன்கு விளங்கிற்று. நான் பல மஸ்ஜிதுகளுக்குஞ் சென்று பார்த்தேன். பல மதரஸாக்களுக்

கும் சென்றேன், பல அறிஞர்களைக் கண்டும் பேசினேன். மஸ்ஜிதுகளில் தொழுகை, திலாவத் செவ்வனே நடைபெற்று வருகின்றன. எல்லாம் ஒழுங்காகவும், நியதியாகவும் நடைபெற்று வருகின்றன. மக்கள் கண் மூடித்தனமாய் இஸ்லாத்தை பின்பற்றாமல், இஸ்லாத்தின் தத்துவங்களை நன்றாய் உணர்ந்து அதன்படி நடந்து கொள்ளுகிறார்கள்.

தற்கால அரசியல்

தற்கால துருக்கி அரசாக்ஷியைப் போல் சிறந்த இஸ்லாமிய அரசாங்கம் இத்தரணியில் வேறெதுவுமே யில்லை. பொருளாதார நிலை, க்ஷேமமான முறையில் இருந்து வருகிறது. புதுப்புது சீர்திருத்தங்களுக்காகவும் பணம் ஸேமிக்கப்பட்டிருந்து வருகிறது. சமீபத்தில் துருக்கிக் குடியரசாங்கத்தில் ஐந்துவருட அரசியல் திட்டம் ஒன்றைத் தயாரித்து, அதை செவ்வனே நிறைவேற்றி முடித்து விட்டதை நேயர்கள் நன்கறிவர். அதனால், துருக்கி இன்று கல்வி, ஒழுக்கம், கைத்தொழில், வித்தை, விவசாயம், அரசியல், முதலிய எல்லாத் துறையிலும் சிறந்து விளங்குகிறது.

துருக்கியில் இப்போது கட்டாயக் கல்வி அமலில் இருந்து வருகிறது. அன்காரா நகரில் பெரியதோர் புதியயூனிவர்ஸிடி (சர்வகலாசாலை) இருக்கிறது. இதன் மேற்பார்வையின்கீழ் 37 காலேஜ்கள் நடைபெற்று வருகின்றன.

துருக்கியில் கட்டிடங்கள் இந்த ஐந்தாறு வருடங்களுக்குள் மகா அற்புதமாய் அபிவிருத்தி யடைந்துள்ளன. வியாபாரங்களும் செழித்துள்ளன. ஏற்றுமதி இறக்குமதிகளும் முன்னேற்ற மடைந்துள்ளன.

இராணுவ விஷயத்திலும் துருக்கி ஐரோப்பிய வல்லரசாங்கங்களுக்கு இணையாகயிருந்து வருகிறது. இவ்விஷயத்தில் பிரான்ஸையும், ஜர்மனியையும், பின்பற்றி நடந்து வருகின்றது. எல்லாம் வல்ல இறைவன் துருக்கியை மேன்மேலும் ஓங்கச் செய்வானாக. காஜீ முஸ்தபா கமால்பாஷாவுக்கு சாந்தி அளித்து கிருபை புரிவானாகவும்.

ஆரோக்கியத்துக்குரிய தூக்கம்

(ஒரு டாக்டர் எழுதியது)

உலகத்துச் சிருஷ்டிகளில் எதுவும் இராக் காலத்தில் தூங்கிச் சுகம் பெறாமலிருப்பதில்லை. உயிர் வாழ்க்கைக்குத் தூக்கம் மிகவும் அத்தியாவசியமாகும். மரஞ்செடிகளும் தூங்குகின்றன; விலங்கினமும் பட்சிகளும் தூங்கிச் சுகம் பெறுகின்றன.

அந்தச் சிருஷ்டிப் பொருட்கள் நிம்மதியாகவும், இயற்கையோடியைந்தும் செம்மையாகத் தூங்குகின்றனர். ஆனால் உயரிய சிருஷ்டியாகிய மனிதருக்குத் தான் நல்ல தூக்கம் கிடைப்பது அரிது. காரணம், மனிதன் இயற்கை நியதிப்படி வாழாமல், உலகத்தின் வியவகாரங்களில் உழன்று வியர்த்தமான தொல்லைகளையெல்லாம் உண்டாக்கிக் கொள்ளுகின்றான்.

சிந்தையும் இடமும்

நல்ல ஆழ்ந்த தூக்கத்துக்கு இரண்டு அம்சங்கள் அத்தியாவசியம்: (1) சஞ்சல மில்லாத சிந்தனை; (2) நிம்மதியான—சௌகரியமான இடம்.

எனவே, தூங்குகிறவருடைய மூளைக்கு எவ்விதமான சஞ்சலிப்பும் இருக்கக்கூடாது. அதாவது, தூங்கும்போது மூளைக்குச் சிரமம் தரக்கூடிய இரைச்சல், கூச்சல், சந்தடி முதலிய ஆர்ப்பாட்டங்கள் இருத்தல் கூடாது. அதிக மிரைச்சலிருந்தால், தூக்கம் நிர்ப்பந்தமாய் வந்தாலும் அதனால் மூளை நிம்மதியடையாமல் கஷ்டத்துக் குள்ளாகின்றது. ஆதலின், ஆரோக்கியத்துக் கேற்ற தூக்கத்தை விரும்புகிறவர்கள், அதிக இரைச்சலில்லாத இடம் பார்த்துத் தூங்குதல் அவசியம்.

இரண்டாவதாக, மூளைக்கு கஷ்டம் இருக்கக்கூடாது. அதாவது கவலையும் துக்கமும் பட்டுக் கொண்டிருத்தல் தூக்கத்துக்கு மிகவும் இடையூறாகும். அத்தகைய நிலையில் தூக்கம் வந்தா

னும், அத்தூக்கம் ஆரோக்யத்துக் கேற்றதாக மாட்டாது.

வெளிச்சம்

தூங்குமிடம் பூரண வெளிச்சமுடையதாக இருக்கவேண்டுமென்று சிலர் கூறுவர். இந்த வாதம் சரியல்ல. ஏனெனின், கண்முன் வெளிச்சம் பட்டுக்கொண்டே யிருந்தால் கண் கூசும். அதனால் நிம்மதியான தூக்கம் ஏற்படமாட்டாது.

முற்றும் வெளிச்சமே யில்லாமல் இடம் அந்தகாரம் நிறைந்ததாகவு மிருத்தல் கூடாது. சாதாரணமாய் இராக்காலத்தில் மிகக் கொஞ்சமாய் வெளிச்சம் வீசும் சின்ன விளக்கொளியுடன் தூங்கலாம்.

சீதோஷ்ணம்

தூங்கும் அறையின் சீதோஷ்ணமும் இயற்கையானதாக யிருத்தல் வேண்டும். இடம் குளிர்ச்சியாக யிருக்கிறதென்று அதைக் கணப்புப்படுத்தவும் கூடாது; மிக உஷ்ணமாயிருக்கிற தென்பதற்காக அதை குளிர்ச்சிப் படுத்தவும் கூடாது.

பனியும் குளிரும் மிகுந்த மேனாடுகளில், விஞ்ஞான (சயின்ஸ்) முறைப்படி நிலக்கரி அல்லது மின்சாரச் சூட்டைக்கொண்டு சட்டிடங்களை உஷ்ணமுள்ளதாகவும் கதகதப்பான தாகவும் ஆக்கிவைப்பது வழக்கம். அதுவும் ஆரோக்கியத்துக்குக் கெடுதியாகும். இயற்கைக்கு விரோதமான சீதோஷ்ணத்தை மாற்றுவதால், தேகத்தில் இரத்த ஓட்டத்தின் வேகமும் பேதப்பட்டு விடுகிறது. அதனால், தூக்கமும் பங்கப்படுவதோடு, ஆரோக்யமும் கெட்டுப்போய் விடுகிறது. அதிக உஷ்ணம் நித்திரையின்போது கூடவே கூடாது. அதனால் நரம்புகள் கெட்டுப்போகும். அதைப்போல் அதிகக் குளிர்ச்சியில், பனியில் தூங்கவும் கூடாது. வெய்யல் காலத்தைவிட வசந்தகாலத்தில் தூக்கம் நன்றாய்வரும். பனிக்காலத்தில் தூக்கம் அதிகமாய் வந்தாலும், அதிகத்தூக்கம் ஆரோக்யத்துக்குக் கெடுதியாகும்.

காற்று

தூங்கும் அறையில் சாதாரணமாய் காற்று வந்துகொண்டும் போய்க்கொண்டு மிருக்கவேண்டும். மின்சார விசிறியை சுழற்றி, அறைக்குள்ளிருக்கும் துர்க்கந்தமான காற்றையே திரும்பத்திரும்ப சுழலவைப்பதைவிட; சுத்தமான வெளிக்காற்று வரும்படிச் செய்து கொள்வது சாலவும் சிறந்தது. காற்று அதிகமாய் வீசிக் கொண்டிருக்கும் மரத்தடியிலும், வனத்திலும், பூங்காவிலும் தூங்குதல் கூடாது. அவ்விடத்துக் காற்று தேகத்துக்கு சீதளத்தைத் தந்து ஆரோக்யத்தைப் பாதிக்கும்.

அவயவங்கள்

தூங்கும்போது தேக அவயவங்கள் அவ்வவற்றின் இயற்கை நியதிப்படி இருத்தல் வேண்டும். முரட்டு வஸ்திரத்தைக் கொண்டு முழு உடலையும் போர்த்து மூடிவிடக்கூடாது. குளிர் காலத்தில் உடலை மூடவேண்டி நேரிட்டாலும், முகத்தை மூடிக்கொள்ளல் கூடாது. இடுப்பு வஸ்திரமும் இறுக்கிக் கொண்டிராமல், மிருதுவாய் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

ஆகாரம்

தூங்கும்போது வயிறு நிறைந்திருக்கக் கூடாது. ஆகாரம் புசித்த இரண்டு மூன்றுமணி நேரத்துக்குப் பிறகே நித்திரை கொள்ளவேண்டும். தூங்கும்போது ஜீரணக் கருவிகளுக்கு அதிக சிரமமிருக்கக் கூடாது. அப்படி ஜீரணக் கருவிகளுக்கு அதிகச் சிரமமிருந்தால், அக் கஷ்டம் மூளையைத் தாக்கி, ஆரோக்கியத்தைக் கெடுக்கும். வயிறு நிறைந்திருக்கையில் தூங்கினால் அஜீரணமோ, மலச்சிக்கலோ ஏற்படும்.

தூங்க வேண்டிய காலம்

மேற்கூறிய காரணங்களைக்கொண்டு, தூங்க வேண்டியகாலம் இன்னதுதானென்று ஆரோக்கிய சாஸ்திர நிபுணர்கள் பின்வருமாறு வகுத்துள்ளார்கள்.

மாலை யுணவு அதிகம் உட்கொள்ளலாகாது. அதாவது ஜீரணத்துக் குக் கடுமையான உணவுப்பதார்த்தங்களை உட்கொள்ளலாகாது. இராவுணவு சாப்பிட்டதும் உடனே தூங்கி விடக் கூடாது.

சிலர்க்கு மாமிசம், முட்டை, கோதுமை முதலிய புஷ்டியான ஆகாரங்களைப் புசித்தால்தான் நிம்மதியாய் தூக்கம் வருவது வழக்கமாம். சிலர்க்கு இதற்கு நேர்முரணான வழக்கமிருக்கிறது.

இரவு உணவு எப்பொழுது உட்கொள்ள வேண்டு மென்று விதி ஏற்படுத்த முடியாது. ஆனால் மாலை 7 மணிமுதல் 8 மணிக்குள் உட்கொண்டு விடவேண்டும். அதன்பின் உழைப்பினாலோ, காற்றுலாவச் செல்வதாலோ அவ்

வுணவு சிறிது ஜீரணமானபின், இரவு 9 மணிக்குத் தூங்கவேண்டும். ஆதலின், இரவில் அதிக நேரஞ் சென்று உணவு உட்கொள்வதும், வெகு நேரஞ் சென்று தூங்குவதும் ஆரோக்கியத்துக்குக் கெடுதியுண்டாக்குவதாகும். இந்நியதிகளை அவரவர்களே யோசித்து யூகித்துணர்வார்களாக.

பெண்கள் கடமை

பெண்கள் மாதவிடாய் காலத்தில் அவர்களுக்கு நித்திரை பங்கப்படும். ஆதலின், பெண்கள் தங்கள் ஆரோக்யத்தை அதிகம் கவனித்துக்கொள்ளுதல் வேண்டும்.

கலியாண பெண்களைவிட கலியாணமாகாத கன்னிப் பெண்கள் அதிகம் தூங்கவேண்டும். ஆனால், வழக்கத்திற்கு விரோதமாக, கன்னிப் பெண்கள், நித்திரா பங்கம் என்ற நோயில் அகப்பட்டுழல்கிறார்கள். நம் பாட்டிமார்கள் யௌவனப் பெண்கள் அதிகம் தூங்கக்கூடாதென்றும் கட்டுப்பாடு செய்து விடுகின்றனர். அதனாலும், அப்பெண்களின் ஆரோக்கியம் கெட்டுப் போகிறது.

குழந்தைகள் தூக்கம்

பெரியோர்களைவிட குழந்தைகளுக்குத் தான் தூக்கம் அத்தியாவசியம். சிறுவர் சிறுமிகளைவிட சிறு குழந்தை அதிகமாய் தூங்கவேண்டும். இதுதான் இயற்கையின் நியதி. ஆதலினால்தான் பால் குடித்து வளரும் குழந்தை அதிகமான நேரம் இரவும் பகலும் தூங்குகின்றன. இத்தூக்கம் அக்குழந்தைகளின் ஆரோக்கியத்துக்கு அத்தியாவசியம்.

மனிதருக்கு வயது அதிகமாக ஆக தூக்கமும் குறைந்து கொண்டே வரும். இது இயற்கையின் நியதி. உதாரணமாய், சிறு குழந்தைகள் பகலிலும் இரவிலும் சுமார் 18 மணி நேரம் தூங்குவதைக் காண்கின்றோம். ஆனால், வயது மூத்த கிழவருக்கும் கிழவிகளுக்கும் இரவு காலத்தில் சுமார் 8 மணி நேரங்கூட சரியானபடி சுக நித்திரை வருவதில்லை. இதற்கெல்லாம் அவரவர் மூளையும் நரம்புகளும் பரிபக்குவமடைந்து முதிர்ச்சியடைவதேயாகும்.

எத்தனை மணிநேரம் தூங்கவேண்டும்?

சாதாரணமாய் தக்க பருவமடைந்துள்ள ஆண், பெண்கள் எத்தனை மணி நேரம் தூங்க வேண்டுமென்பது ஒரு பெரும் பிரச்னையாகயிருக்கிறது. இவ்விஷயத்தில் டாக்டர்கள் பலவித அபிப்பிராயமுடையவர்களாயிருக்கிறார்கள். அனுபவசாலிகள் கூறுவது வேறுவிதம். சுருங்கக்கூறுமிடத்து, அவரவரது தேகாரோக்கியத்துக்கேற்ப தூங்க வேண்டியது அத்தியாவசியம். எனவே, ஒவ்வொரு யுவ வயதுடையவர்களும் கட்டாயம் சுமார் 8 மணி நேரம் தூங்கவேண்டும். சாதாரணமாக இரவு 10 மணிக்குள் தூங்கி காலை 5 மணிக்குள் எழுந்து கொள்வது மிகவும் நல்லது.

தூக்கமில்லாமலிருந்தால் உடனே அதற்கு தகுந்த சிகிச்சை செய்து கொள்ள வேண்டும். நித்திரா பங்கத்தினால் பலவித வியாதிகள் உண்டாகும்.

எனவே, இரவில் அதி சீக்கிரம் தூக்கத்திலாழ்ந்து காலையில் சூரியோதயத்துக்கு முன்னால் எழுந்து கொள்வதே ஆரோக்கியத்துக்கேற்ற தூக்கமாகும். இவ்விதம் தூங்கும் மக்கள் நூறு ஆண்டுகளுக்குமேல் ஜீவிப்பார்கள்.

பிரபஞ்ச அதிசயங்கள்

மனிதரைத் தின்னும் மரங்கள்

புலியும், சிங்கமும், ஓநாயும்தான் மனிதரைப் பிடித்துத்தின்னும் என்று கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால், இருக்குமிடத்தை விட்டு அசையாத தாவர வர்க்கங்கள் மனிதரைப்பிடித்துத்தின்னுகின்றனவென்பது நம்பக் கூடிய விஷயமாயிருக்கிறதா? ஆம். வாஸ்தவமாகவே, சில வகை மரஞ்செடிகள், தென் அமெரிக்கக்காடுகளில் இருக்கின்றன. அவை மனித வர்க்கத்துக்கு இயற்கைப் பகைவனைப் போல் இருக்கின்றன. தப்பித்தவறி மனிதர்கள் அவ் விருக்ஷங்களருகிற் சென்று விட்டால் அதற்கு உயிர் உண்டாகி விடுகின்றன. உடனே, அதன்

கிளைகளும், கொடிகளும் நெளிந்து சட்டென்று மனிதனது தேகத்தைப் பிடித்துச் சுருட்டிக் கொள்ளுகின்றன. அதன் பிசாசுப் பிடியி னின்று பலஹீனனான தனி மனிதன் விடுபட் டுக்கொள்ளமாட்டாமல், திணறித் துடித்து மாண்டு விடுகிறானும்.

மூர்ச்சிக்கச் செய்யும் மரம்

அத்தகைய ராக்ஷஸ மரங்களில் மற்றுஞ் சில வகைகளுமிருக்கின்றன. இவற்றின் தோற்றம் மிகவும் ரமணீகாமாய் அழகாய்க் காணப்படும். அதைக் கண்ணுறும் எவரும் அம்மரத்தின் அழகையும், அதிலுள்ள புஷ் பங்களின் நறுமணத்தையும் உணர்ந்து அதன் அருகில் செல்லாதிருக்கமாட்டார். அங்ஙனம் அம்மரத்தருகில் சென்றதும் திடீரென்று அம் மனிதனுக்கு மயக்கமுண்டாகி விடுகிறது. இதை யாரேனும் தற்செயலாய் கண்டு, சட்டென்று காப்பாற்றி, தக்க வைத்தியரைக்கொண்டு சிகிச்சை செய்தால் பிழைத்துக்கொள்வான். அங்ஙனமின்றி சிறிதுநேரம் அம்மரத்தடியி லேயே மூர்ச்சித்துக் கிடக்க நேரிட்டால் பிறகு அவனைப் பிணமாகத்தான் கண்டெடுக்கமுடி யும். அநாகரீக காட்டுப்பிரதேசமான அந்த அமெரிக்காவில் எண்ணற்ற மக்கள் அறியாமை யால் அத்தகைய அழகிய மரங்களின் நிழலில் தங்கச்சென்று, மூர்ச்சித்து மரணித்துப்போவ துண்டு. அம்மரங்களின் இத்தகைய அபூர்வ சக்தி யாதாயிருக்குமென்று மேனாட்டு வைத்தி யர்கள் ஆராய்ச்சிசெய்து வருகிறார்களாம்.

* * *

சமுத்திரத்தில் 20 லக்ஷம் பவுன்

"டுமாயின்" என்ற பிரிட்டிஷ் கப்பலொன்று 130 வருஷங்களுக்குமுன், "ஜொடோஸி" என்ற தீவுக்கருகில் சமுத்திரத்தில் மூழ்கிவிட் டதாம். அந்தக் கப்பலில் இதர சாமான்களல் லாது, 20,00,000 (இருபது லட்சம்) பவுன் கள் பொறுமான பொக்கிஷங்கள் இருந்ததாம். அந்தக் கப்பல் சமுத்திர அடியில் எங்கிருக்கிற தென்று கண்டுபிடித்து, அக்கப்பலையாவது, பொக்கிஷத்தையாவது வெளிப்படுத்த, "காரி மாட்டா" என்ற கப்பல் வெகுநாட்களாக முயன்று வருகிறது. மூழ்கிப்போன கப்பல் தரைதட்டிய இடம் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால், அக்கப்பலை வெளியே கொண்டுவருவது சிரமசாத்தியமாயிருக்கிறதாம். இதுவரை பிர யத்தனப்பட்டு 48 அடி உயரத்துக்கு அக்கப் பலை உயர்த்தி விட்டார்களாம். இதுவரை கிடைத்த மட்டும் அக்கப்பலிலிருந்து எடுத்து வர முயற்சித்ததில் 2 லட்சம் பவுன் பெறு மான சாமான்களைத்தான் எடுக்க முடிந்ததாம். அக்கப்பல் சமுத்திர தீரத்தில் சின்னபின்னப் பட்டுக்கிடக்கிறதாம்.

* * *

29 பிள்ளைகள் பெற்ற பெண்மணி

ஸினியோரா கிரேஸா....என்ற நீண்ட பெய ருடைய ஸ்திரீ யொருத்தி மெக்ஸிகோ நகரில் இருக்கிறாள். இவளுக்கு வயது தற்சமயம் 63. இவளுக்கு ஸ்தல கவர்ன்மெண்டார் 200 பவுன் இனம் கொடுத்தார்கள். ஏன் தெரியுமா? உல கத்திலேயே அதிக குழந்தைகளை ஜனித்த பெண்மணி அவள்தான் என்பதற்காக. இது வரை அவள் 29 விடுத்தம் சூல்கொண்டு, 29 குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளாள். அக் குழந்தைகளில் 19 பிள்ளைகள் இன்றும் உயி ரோடிருக்கின்றன. பிள்ளைகளின் வயதுகள் 4 முதல் 45 வயதுகளாகும். அதாவது சின்னக் குழந்தையின் வயது 4, பெரிய பிள்ளையின் வயது 45. பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் பிறந்த பேரன் பேத்திகளெல்லோரும் சேர்ந்து அக்குடும்பத்தில் 150 மக்கள் இருந்து வருகின் றனர். எல்லோரும் ஒரே குடும்பத்தாராகவே யிருக்கும். எப்போதும் அந்த குடும்பத்தில் கல்யாணச்சந்தடியைப்போலவே இருக்குமாம்.

* * *

வால் உள்ள விநோத மனிதன்

மனிதனின் உற்பத்தியைப்பற்றி விஞ்ஞான சாஸ்திரிகள் ஓயாது ஆராய்ச்சி செய்து கொண் டிருக்கின்றனர். கற்சிலைகளையும், எலும்புக் கூடுகளையும் ஆராய்ச்சி செய்து ஆதி மனிதர் எப்படி உண்டாகியிருப்பார் என்பதை பலவாறு நிர்ணயித்துக் கூறுகின்றனர். ஆனால், மனித மூதாதைகளின் ஆராய்ச்சி ஒருபக்கமிருக்கட் டும். தற்கால மனிதர்களின் தேக அமைப்பி லேயே சிற்சிலசமயங்களில் விசித்திரமான மாறுதல்கள் ஏற்படுவதைக்கண்டு விஞ்ஞானி கள் திகைத்துப் போகிறார்கள். உதாரணமாக, பாப்புலாண்டு என்பது ஒரு தீவு. அவ் விடத்து கவர்னர், ஒரு புதுமையைக்கண்டு பிடித்து அறிவித்துள்ளார். அதாவது, பலாயி நதிக்கரையில் ஒரு மனிதன் காணப் பட்டான்; அவன் நிர்வாணமாகவே இருந் தான்; அவனுக்குப் பின் புறத்தில் சுமார் ஒரு

அடி வால் இருந்தது. அவன் நேரே காட்டுப் பக்கம் சென்று விட்டான். அவன் போன திசையை நோக்கி, ஆராய்ச்சியாளர்கள் சென்று பார்த்ததில், அவனைப்போல் வால் முளைத்த மனிதர் கூட்டம் அங்கிருக்கக் கூடுமென்று கருதப்படுகிறது. குரங்குதான் மனிதராய் மாறி வருகிறது என்று டார்வின் என்ற மகாப் பெரும் ஆராய்ச்சிக்காரர் கூறுகின்றார். இந்த வால் உள்ள மனிதரைக் கண்டு விட்டால், அவர் தம்முடைய ஆராய்ச்சி முற்றும் உண்மை யென்று கர்ஜித்து ஆனந்தத்தாண்டவம் போடு வாரெனபதில் ஐயமில்லை. தெய்வ சிருஷ்டி யின் விநோதம்தான் என்னே?

* * *

தீப் பொரி பறக்கும் தேகமுள்ளவன்

மனிதருடைய தேக உஷ்ணம் அதிகரித் தால் ஆரோக்கியம் கெட்டு, மனிதன் ஜுரம் முதலிய நோய்களுக்கு ஆளாகி விடுகிறான் என்று சொல்கிறார்கள். ஆனால், ஆப்பிரிக்காவிலுள்ள ஹெர் லேஸ்மிக் என்ற ஒருவனது தேகம் எப்போதும் 101 டிக்ரி உஷ்ணமுடையதாய் தீப் பொரி பறந்துகொண்டே இருக்கிறதாம். ஆயினும், அவன் சாதாரண உஷ்ணமுள்ள மனிதர்களைப்போல் ஆரோக்யமாய் வேலை செய்து கொண்டுதானிருக்கிறான். டாக்டர் கள் இதைக்கண்டு ஆச்சரியப்படுகிறார்கள். இவ னுடைய உஷ்ணத்தை அளக்கக் கருவியே கிடையாதென்றும் கூறுகின்றனர்.

* * *

டெலிபோன் பேசும் இயந்திர மனிதன்

ஐரோப்பாவில் விஞ்ஞானிகள் நூதன மெஷின் ஒன்றைக் கண்டு பிடித்திருக்கின்றனர். அந்த மெஷினுக்குப் பெயர் இரும்பு மனிதன். அந்த இயந்திரம் ஒரு மனித உருவத்தைப் போலவே இருக்கும். அதன் வேலை யாதெனின், டெலிபோனில் யாராவது பேசினால் அதைக் கேட்டு பதிவு செய்து கொள்ளுமாம். இன் னும் டெலிபோன் ஹவுஸின், "கால்" பண் ணுபவர்களின் கட்டளைக்கு நம்பர்களை இணைத்து வைக்குமாம். டெலிபோன் பேசும் இந்த இயந்திர மனிதனின் உதவியால், டெலி போன் விடுதியில் நேரிடும் பல கஷ்டங்கள் போய்விடுமென்று கருதப்படுகிறது. பெல் ஜிய கவர்ன்மெண்டார் இத்தகைய மெஷினுக்கு ஏராளமாய் ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள். இந்த மெஷின்களைக் கொண்டு, டெலிபோன் டிபார்ட்மெண்டையே நவீன முறைப்படி மாற்றியமைக்கப் போகிறார்களாம். அந்த மெஷினின் மற்றொரு உபயோகம் யாதெனில், எத்துணை தூரத்திலிருந்து ஆசாமி பேசுகிறார் என்பதையும் குறிப்பிட்டுக்காட்டுகிறதாம்.

* * *

அழகாக யிருப்பதும் குற்றமாம்

பெண்கள் மிகுந்த அழகாய் இருப்பதும் ஒரு பெருங் குற்றமென்று கருதப்பட்டு தண்டனை விதிக்கப்படும் நாடொன்று இருக்கிற தென்ப தைக் கேட்டு யார்தான் ஆச்சரியப்பட மாட் டார்கள். ஆப்ரிக்காவுக்கு யாத்திரை சென்று வந்த ஐரோப்பியர் அங்கு கண்டறிந்த நிகழ்ச்சி யொன்றை பின்வருமாறு கூறுகின்றார்:—

ஆப்ரிக்காவில் சில வின்னியாஸ ஜாதியின ரைக் கண்டேன். இவர்களது பழக்க வழக்கம் மற்ற உலக வழக்கத்துக்கு நேர் முரணாக யிருக் கிறது. அங்குள்ளவர்கள், தங்கள் பெண்களை, குடும்ப தேவதைகளுக்கு அர்ப்பணம் செய்து விட்டு விடுகிறார்கள். மிகவும் அழகுள்ள பெண்ணை தேவதை ஒப்புக் கொள்கிறதில்லை யென்பது அவர்கள் நம்பிக்கை. அப்படிப் பட்ட அழகான பெண்களை தேவதையிடம் விட்டால் தேவதை சபித்துவிடுமாம். அப் படிப்பட்ட அழகான பெண்களை அந்த தெய் வத்துக்கே பலியிட்டு விடுகிறார்கள். எனவே, அந்த ஜாதியாரிடம் அழகாக யிருப்பதும் மாபெரும் குற்றமாய் மதிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்படுகிறது.

* * *

15 மைல் நீள சுரங்கம்

இவ் வுலகத்தில் மிக நீளமான சுரங்கம் ஸ்காட்லாண்ட் தேசத்தில் இருக்கிறது. அதன் நீளம் 15 மைல். பூமிக் குள்ளேயே அத்துணை தூரமும் குடையப்பட்டு மிக அற்புதமாய் அமைந்துள்ளதாம். ஆங்காங்கு வெளி வெளிச்ச மும் வரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளதாம். ஆனால் வெளியிலிருப்பவர்கள் அஃதொரு சுரங்க மென்று சாதாரணமாய் கண்டுகொள்ள முடியா தாம்.

* * *

தலைரோமங்கள் எத்தனை?

உங்கள் தலையிலுள்ள மயிர்களை யெல்லாம் கணக்கிட்டு எண்ண உங்களால் முடியுமா? இதோ

மேனுட்டு வேலையில்லாப் பேர்வழி ஒருவன் அந்த சிரோ ரோமங்களை யெல்லாம் எண்ணிப் பார்த்து பின்வரும் கணக்கை ஒப்படைக்கிருன் அதை நீங்கள் பரீக்ஷித்துப் பாருங்கள்.

ஒவ்வொரு மனிதனுடைய தலையிலும் சுமார் 14,00,000 ரோமங்கள் இருக்கின்றன. ஆனுல், ஒரு யௌவனப் பெண்ணுடைய தலையில் 10,000,000 கேசங்கள் இருக்கின்றனவாம். (ஆனுல் வழுக்கை மண்டையன் தலையில் எத்தனைமயிர் இருக்கிறதென்று அவர் கணக்கிட மறந்து விட்டாராம்)

* * *

ஜனங்கள் அதிகமுள்ள நாடு

உலகத்தில் ஜனத்தொகை அதிகமுள்ள பிரதேசங்கள் சிலதேயாகும். அதில் முதன்மையானது சீனு தேசம், இரண்டாவது ரஷ்யா, மூன்ருவது இந்தியா அப்புறம் மற்றவை !

* * *

முப்பதுவருஷம் மௌனவிரதம்

மிஸ்டர் காந்தி வாரத்துக்கொருதரம் பேசாமல் மௌனவிரத மனுஷ்டிப்பதை அநேகர் போற்றுகிருர்கள். ஆனுல், போலண்டிலுள்ள "ஏப்பராமில்" என்ற ஒருவர் சரியாக 30 வருஷங்கள் யாருடனும் பேசாமல் மௌன விரதமிருந்துள்ளார். அதற்குக் காரணத்தை கேளுங்கள்:—ஏப்பராமிர் தன் மனைவியை கடுமொழிகளால் வைதுவிட்டார், அதனுல் அவள் தற்கொலை செய்துகொண்டாள். எனவே, மனசஞ்சல மடைந்த ஏப்பிராமர் அது தொடுத்து 30 வருஷம் யாருடனும் பேசவே இல்லையாம்.

துருக்கி வாழ்க

துருக்கிக் குடியரசின் தலைவர் காஜீ முஸ்தபா கமால் பாஷா "அத்தாதுர்க்" அவர்கள் 10-11-38வ தாருல் பக்கா அளவிற் சேர்ந்ததும், அவருக்குப் பிறகு குடியரசுக்குத் தலைவராக துருக்கிக் குடியரசின் மாஜீ பிரதம மந்திரி ஜெனரல் இஸ்மத் பாஷா "உனூன்" அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டதும் நேயர்களுக்குத் தெரிந்த விஷயமே. அத்தாதுர்க் மர்ஹூம் அவர்களது வபாத்துச் செய்தியைக் கேட்டு முஸ்லிம் உலகமும், கீழ் நாடுகளும் ஆருத் துயரடைந்ததென்பதிலையில்லை. ஏனெனில், "கீழ் நாட்டினருக்கும் உயிர் இருக்கிறது; அவர்களும் சுயமரியாதைக்காரர்தான்" என்பதை மேனுட்டினருக்குப் பாடங் கற்பித்துக் கொடுத்தவர் நமது அத்தாதுர்க் முஸ்தபா கமால் ஆவர். அவரது ராணுவத் திறமை, நிர்வாகத் திறமை முதலியவைகளைப்பற்றிய விவரம் அவரது ஜீவிய சரித்திரத்தில் விளக்கப் பட்டிருக்கிறது. ஆதலால், அவைகளைப்பற்றி மறுபடியும் எழுத விரும்பவில்லை. அத்தாதுர்க் மர்ஹூம் அவர்கள் செய்த அரும் பெருங் காரியங்கள் பலவற்றுள் தமக்குப் பின் துருக்கிக் குடியரசின் செல்வாக்கைக் குன்றவிடாமல், துருக்கியின் கௌரவத்தை இன்னும் மேலோங்கச் செய்யக்கூடிய பல தலைவர்களை அவர் உற்பத்தி செய்திருப்பதும் ஒன்ருகும். துருக்கி சர்வாதிகாரியான காஜீ முஸ்தபா கமால் பாஷா மர்ஹூம் அவர்கள் வபாத்தையும், காஜீ இஸ்மத் பாஷா "உனூன்" அவர்கள் தலைவராக ஏக மனதாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதையும் கவனிக்குமிடத்து, அரபிப் பாஷையில் தேர்ந்த பண்டிதர் ஒருவர் கூறிய அரிய செய்யுள் நமது நினைவிற்கு வருகிறது. "சூரியன் அஸ்தமித்தாலும், அது நமக்குப் பூரணச் சந்திரனை விட்டுச் சென்றிருக்கிறது" என்பது அச்செய்யுளின் கருத்து.

இஸ்மத் 'உனூன்' அவர்கள், சின்னுபின்னமாய்த் துருக்கி சீர்குலைந்திருந்த காலத்தில் அத்தாதுர்க் மர்ஹூம் அவர்களுக்கு வலக்கரம் போல் இருந்து, அதனைத் தன்னிலைமைக்குக் கொண்டுவந்தவர். மகாயுத்தம் முடிவடைந்து, துருக்கியை ஐரோப்பியர் பங்கு போட்டுக் கொண்டபின், எஞ்சியுள்ள அனதோலியா மாகாணத்தையும் கைப்பற்றிக்கொள்ள வேண்டும் என்று கிரேக்கர்கள் படையெடுத்து வந்த காலத்தில், சில துருக்கி வீரர்களைக்கொண்டு

ரேக்கருக்குப் படுதோல்வி யளித்தவர். அப்புறம் துருக்கியருக்கும் கிரேக்கருக்கும் நடந்த இறுதியுத்தத்தில் அத்தாதுர்க் மர்ஹூம் அவர்களது தலைமையின் கீழில் போர்க்களம் சென்று, போர் புரிந்து பகைவரைப் புறமுதுகு காட்டச் செய்தவர். இவர் ராணுவத்திறமை மட்டிலுமுள்ளவரல்லர். தேச நிர்வாகத்திலும், பகைவரின் மத்தியில் தமது கக்ஷியை எடுத்துரைத்துத் திறம்படத் தமது காரியத்தைச் சாதித்துக்கொள்வதிலும் வல்லுனர்.

துருக்கியருக்கும் ஐரோப்பிய நேசதேசத்தாருக்கும் லாசேனில் நடைபெற்ற உடன்படிக்கை மகாநாட்டிற்கு, துருக்கி தேசிய சபை அதாவது காஜீ முஸ்தபா கமால் பாஷாவின் குடியரசுக் கட்சியின் பிரதிநிதியாகச் சென்று வெகு சமர்த்தாக காஜீ முஸ்தபா கமால்பாஷாவினுடையவும், அவரது தேசிய சபையினுடையவும் கட்சியை எடுத்துரைத்து, தற்போது துருக்கிக் குடியரசிற்கு இருந்துவரும் சுயேச்சையைப் பெற்றார். இதற்கு முன்னர், துருக்கியிலிருந்த உதுமானியா ஏகாதிபத்தியத்தில் கிறிஸ்துவ சமூகத்தாருக்கு விசேஷ சலுகைகள் பலவிருந்தன. ஐரோப்பிய கிறிஸ்துவர் ஒருவர் ஒரு குற்றத்தைச் செய்தால், அக்குற்றத்தை விசாரித்துத் தண்டிக்கும் உரிமை துருக்கியருக்கு இல்லாதிருந்தது. ஐரோப்பிய கிறிஸ்துவராலும் துருக்கியராலும் விசாரிக்கப்படும் கலப்பு கோர்ட்டிலேயே அத்தகைய வழக்குகள் விசாரிக்கப்படவேண்டும். நீதி விஷயத்தில்கூட இவ்வளவு வித்தியாசம் பாராட்டப்பட்டதென்றால், இதர காரியங்களில் ஐரோப்பிய கிறிஸ்துவருக்கு எத்தனை சலுகைகள் இருந்திருக்கும் என்பதை நேயர்கள் உணர்வார்களாக. இவ்வித மிருந்த விசேஷ சலுகைகளெல்லாம் லாசேன் மகாநாட்டில் விவாதிக்கப்பட்டு, துருக்கியருக்குச் சாதகமாக முடிவு செய்யப்பட்டன. சுருங்கக் கூறுமிடத்து, லாசேன் மகாநாட்டில் இவரால் எடுத்துரைக்கப்பட்ட விவாதங்களனைத்தையும், இவர் அங்கீகரித்த உடன்படிக்கை நிபந்தனைகளையும் துருக்கி தேசிய சபை பூரணமாக ஏகமனதாய் அங்கீகரித்தது.

இவரை மடக்கவும், ஒடுக்கவும் ஐரோப்பிய நேசகக்ஷியினர், லாசேன் மகாநாட்டில் எத்தனையோ விதமாக முயன்றனர். ராணுவ கவாத்துகளைக் காண்பித்தனர். உருட்டினர், மிரட்டினர். இறுதியாக யாரோ ஒருவரால் இவர்மீது துப்பாக்கி வேட்டும் சுடப்பட்டது. நல்லவேளையாகக் குறி தவறிவிட்டது. இத்துப்பாக்கிச் சூட்டைப்பற்றி மகாநாட்டில் இவர் பிரஸ்தாபித்து "குண்டு மழைக்குள்ளிருந்து வந்திருக்கிற யான், இந்த உருட்டல்களுக்கு அஞ்சப்போவதில்லை" என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினார். அப்புறம் விவாதங்களின் மத்தியில் பிரிட்டிஷ் பிரதிநிதியாகச் சென்ற லார்டு கர்ஸன் போன்றவர்கள் கூறிய மிரட்டல்களையெல்லாம், புன்சிரிப்பில் மடக்கி துருக்கியின் தற்போதைய சுயேச்சையை அடைந்தார்.

இம்மகாநாட்டில் இவர் செய்த அரிய ஊழியங்களைப் பாராட்டி துருக்கிக் குடியரசின் தலைவர் இவரைப் பிரதம மந்திரியாக நியமித்தார். அக்காலத்திலிருந்த துருக்கி தேசீய சபை அதாவது அன்கரா கவர்ன்மெண்டின் பார்லிமெண்ட் சபை இவரது மந்திரிச் சபையை ஏகமனதாக ஆதரித்தது. அப்புறம் தொடர்ச்சியாக இவர் 13 வருஷகாலம் பிரதம மந்திரியாக இருந்தார். இவரது உத்தியோகப்பதவி காலத்தில் துருக்கி பல துறைகளிலும் அடைந்த முன்னேற்றங்களின் விபரம் அத்தாதுர்க் அவர்களது தலைமைப்பதவி காலத்தில் துருக்கி அடைந்த முன்னேற்றங்களேயாகும். ஆதலால், அவைகளைப்பற்றி விசேஷமாக இங்கு கூற விரும்பவில்லை.

இப்பொழுது துருக்கி பார்லிமெண்ட் சபை இவரை ஏகமனதாகத் தலைவராகத் தேர்ந்தெடுத்ததும், இவரைப்போல் திறமைசாலிகள் பலர் இருந்தும், ஒருவரும் இவருக்குப் போட்டியாக நிற்க முன்வராததும் இவர்பால் துருக்கியருக்கு இருக்கிற அபிமானத்தையும், அன்பையும், நம்பிக்கையையும் காட்டுகின்றன. தலைவர் தேர்தலில் கட்சிப் பிரதிகட்சிகள் உண்டாக இடங்கொடாதிருந்த துருக்கியர் இனியும் வருங்காலத்தில் ஒற்றுமையாகவும் ஐக்கியமாகவும் இருந்து இன்னும் பல முன்னேற்றத்தையடைந்து கீழ்நாட்டினருக்கும், இஸ்லாமிய உலகினுக்கும் ராஜீயத் துறையில் வழிகாட்டுவார்களாக. தலைவர் இஸ்மத் உனூன் தமது தலைவரான கமால் அத்தாதுர்க்கின் ராஜதந்திர முறைகளைப் பின்பற்றி துருக்கியருக்கு வழிகாட்டி அவர் விட்டுச்சென்ற முன்னேற்றகரமான காரியங்களை இனிது நிறைவேற்ற எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக. ஆமீன்.

பலஸ்தீன் அரபியர் விசாரம்

பாலஸ்தீனிலுள்ள அரபியரின் விசாரம் இஸ்லாமிய உலகின் மனதைப் பிளந்து கொண்டிருக்கிறது. பலஸ்தீனில் அறபியர் அடையும் துயரத்தையும், யூதர் குடியேற்றத்தையும் குறித்து உலக முஸ்லிம்களது உணர்ச்சியை இன்னமும் மேனாட்டினர் உணராமலிருப்பது வருந்தத்தக்க விஷயம். இதுகாறும் பலஸ்தீன் அறபியர் விஷயத்தில் உலக முஸ்லிம்கள் வாயளவில் அனுதாபம் காட்டிவிட்டு, கிரியாம்சையில் மௌனமாக இருந்தே வந்திருக்கின்றனர். இவர்கள் இவ்வாறிருந்து வருவதை மேனாட்டினர் தவறாக அர்த்தஞ் செய்துகொண்டார்களோ என்று நினைக்கவேண்டியதிருக்கிறது. சமீபத்தில் பிரசுரமான பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பலஸ்தீன் கமிட்டி அறிக்கையில் பலஸ்தீனத்தை 5 கூறாகப் பங்கு வைக்கச் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. ஒரு பகுதியை யூதர் நாடென்றும், மற்றொரு பகுதியை அறபியர் நாடென்றும், பைத்துல் முகத்தஸ் பிரதேசம், வடக்கு மாண்டேகு நாடென்றும், தெற்கு மாண்டேகு நாடென்றும் பிரித்து சமஷ்டி அரசாங்கத்தை ஏற்படுத்தச் சிபார்சு செய்திருக்கிறார்கள். இதனைக் குறித்து லண்டனில் வட்டமேஜை மகாநாடொன்று கூட்டப்போவதாகவும், அம்மகாநாட்டில் சமரசமேற்படாவிடில் பிரிட்டிஷ் அரசாங்கத்தினர் தங்கள் யுக்தம்போல் செய்வார்கள் என்றும் சொல்லிக்கொள்ளப்படுகிறது. இஸ்லாமிய உலகின் உணர்ச்சியைச் சரிவர உணர்ந்து கொள்ளாததால்தான் பிரிட்டிஷார் இவ்வித முயற்சியைச் செய்கின்றனர் என்பதில் சந்தேகமில்லை.

பலஸ்தீன் தேசம் அல்லாஹுத்தஆலாவினால் முஸ்லிம்களுக்கு அளிக்கப்பட்டது. இறைவனது கட்டளைக்கு மாறாக யூதர்கள் நடந்துவந்த அக்கிரமச் செய்கைகளுக்குத் தண்டனையாக உலகில் யூதருக்கு தாய்நாடு இல்லாமற் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வித நிலைமையில் பிரிட்டிஷார் செய்யும் முயற்சியைப் பார்க்கின், அறபியரைப் பலஸ்தீனின் ஒரு பகுதிக்கு ஒதுக்கிவிட்டு, யூதருக்கு ஒரு பகுதியைக் கொடுத்து, அத்தேசம் முழுவதிலும் கிறிஸ்துவரின் ஆதிக்கத்தைப் பலப்படுத்த முயல்வதாகவே தெரிகிறது. பிரிட்டிஷார் இம்முயற்சியில் வெற்றிபெற மாட்டார்கள் என்பதிற் சந்தேகமில்லை. ஏனெனில், அவர்களது இம்முயற்சி அறபியரை அல்ல, முஸ்லிம் உலகினரை அல்ல, ஆண்டவனின் கட்டளையை, அவனது செய்கையையே மாற்றுவதாக இருக்கிறது. ஆண்டவனின் செய்கையை எதிர்த்தவர் எவரும் வெற்றிபெற்றதே இல்லை, வெற்றி பெறவும் முடியாது.

இதுகாறும் சென்ற 18 வருஷ காலமாகப் பிரிட்டிஷார் அங்கு ஆதிக்கம் செலுத்திவருவது அவர்களது ஆயுத பலத்தாலும் அல்ல, ராஜதந்திரத்தாலுமல்ல. அறபியர் அல்லாஹ்வினுடையவும், அவனது றஸூலினுடையவும் அறுதிமானத்தைப் புறம்பே தள்ளி, கலீபாவிற்கு விரோதமாக பிரிட்டிஷாருடன் சேர்ந்து, மகா யுத்தத்தில் செய்த துரோகத்தின் பலனேயாகும். அவர்கள் செய்த துரோகத்தின் பலனை அவர்கள் நன்கு அனுபவிக்கட்டும் என்பதற்காகவே, இஸ்லாமிய உலகம் கிரியாம்சையில் இறங்கவில்லை என்பது பிரத்தியக்ஷம். துருக்கியின் தலைவர் முஸ்தபா கமால்பாஷா அவர்கள் கலீபாவை அகற்றியதும், மகா யுத்தத்தில் அறபியரும் பிறரும் கலீபாவிற்கு விரோதமாக வாளேந்தியுத்தஞ்செய்ததும் ஒற்றுமையின்மையாலேற்பட்ட பலனேயாகும். முஸ்லிம்களுள் ஒற்றுமையில்லாமல், ஒருவரோடொருவர் சண்டைபோட்டுக்கொள்வது 'கித்தாபுல்லா'வை அலக்ஷியம் செய்வதன் பயன் என்றும், முஸ்லிம்கள் மீது அந்நியர் ஆதிக்கங்கொண்டு கொடுமைப்படுத்துவது அல்லாஹ்வினுடையவும், அவனது ரஸூலினுடையவும் அறுதிமானத்தை மீறியதன் பயன் என்றும் ஹதீது ஷரீபுகளில் வந்திருப்பதற்கேற்ப, பலஸ்தீன் அறபியர் துயரமடைந்து வருகின்றனர். அறபியர் தங்கள் தவறையுணர்ந்து தங்களைத் திருத்திக்கொள்கிற அன்றைய தினமே யூதர்களும் பிரிட்டிஷ் மேலதிகாரமும் அந்நாட்டைவிட்டுச் சென்றுவிட வேண்டிய காலம் வந்துவிடும் என்பதையும், அவ்விதமான நிலைமை மாறி வருவ

அறபி மக்களின் போக்கிலிருந்து தெரிய ...றது என்பதையும் யூதரும் பிரிட்டிஷா உணர்வார்களாக.

...தர்கள் தங்கள் பழைய காலத்துப்போக்கை ...ற்றிக்கொள்ளாமல் இருந்துவருவதால் ஜெர்மனி இத்தாலி முதலிய தேசங்களிலிருந்து துரத்தப்பட்டு வருகின்றனர். இதர நாடுகளிலும் அவர்கள்பால் நல்ல எண்ணமில்லை. பிரிட்டிஷார் யூதருக்குச் செய்துகொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவேண்டுமானால் அவர்களுக்குச ... ந்தமாகவுள்ள வேறொரு நாட்டிற்கு ... அனுப்பலாம். அவ்வாறு அனுப்புவதை முஸ்லிம்கள் எதிர்க்கப் போவதில்லை. பல கோடிக்கணக்கான முஸ்லிம் பிரஜைகளையுடைய பிரிட்டிஷார் முஸ்லிம்களை இம்முறையில் புண்படுத்திவருவது அழகல்ல. பிரிட்டிஷ் உ... தியோகஸ்தர்களும் சிப்பாய்களும் அறபிய ... படுகொலை புரிந்து வருகின்றனர். அறபிய ... தங்களுக்கிழைக்கப்பட்டு வரும் சொல் ... ணா இன்னல்களைக் கண்டு துயரமடைந்து ... ன்றனர். பொறுமைக்கும் ஓரளவுண்டு. ...ரிட்டிஷார் ஒருமுறை தவறு செய்தாலும், அத்தவறை அவர்கள் உணர்ந்தால் திருத்திக்கொள்வது அவர்களது பரம்பரை வழக்கம். ஆகவே, பிரிட்டிஷாரின் இவ்வழக்கத்தையறிந்த முஸ்லிம்கள் தங்கள் வருத்தத்தைப் பிரிட்டிஷாருக்குத் தெரிவித்து வருகின்றனர். முஸ்லிம்கள் பிரிட்டிஷாரைத் தயவாகக் கேட்டுக்கொள்வதை மதித்து அவர்கள் யூதர் குடியேற்றத்தை நிறுத்தி, தங்கள் மேலதிகாரவேலையை வாபஸ் பெறுவார்களாக. இல்லையேல், உலக முஸ்லிம்களெல்லாம் ஒன்றுசேர்ந்து யூதரையும், யூதர்களை ஆதரிப்பவர்களையும் எதிர்க்கும் நிலைமை ஏற்படலாம். முன்னொரு காலத்தில் கிறிஸ்துவ உலகம் முழுவதுமே பலஸ்தீனத்தைக் கைப்பற்ற வந்து அகோர யுத்தம் செய்ததையும், இறுதியாகப் புறமுதுகு காட்டியதையும் பிரிட்டிஷார் உணர்ந்து, தங்களது பலஸ்தீன் கொள்கையைக் கைவிட்டு, சமீபத்தில் நடைபெறப் போகிற வட்டமேஜை மகாநாட்டில் அறபியரின் கோரிக்கையை அங்கீகரித்து அவர்களுக்கு நியாயம் வழங்குவார்களாக. எல்லாம் வல்ல இறைவன், அநீதி செய்யப்படும் அறபியருக்கிரங்கி, அவர்களது துயரத்தை நீக்கத் தனது பெரும் கருணையை அருளுவானாக.

ஆமீன்.

இஸ்லாமியப் போதனையின் மகிமை

[தேன்காசி. மௌலவீ· மீ. இ. மு. அபுல்ஹஸன் ஷாதலி சாஹிப் வரைவது]

உலகில் ஒருமதத்தை உண்மையானது என்றும், மக்கள் யாவரும் பின்பற்றத்தக்கது என்றும் நாம் கூறவேண்டுமாயின், அம்மதத்தைப்பற்றி அம்மதத்தைப் பின்பற்றாத இதரர்கள் எங்ஙனம் கருதுகின்றனர்? அம்மதப் போதனைகளைப்பற்றி எத்தகைய அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்? என்பதை முதன் முதலாகக் கவனித்துப்பார்க்கவேண்டும். இவ் விஷயத்தில் மற்றெல்லா மதங்களைவிடவும் இஸ்லாம் மார்க்கம் சிறந்ததோர் அம்சத்தைப் பெற்றிருக்கிறது. இதைப்பற்றி பிறமத அறிஞர்கள் தங்களின் உயரிய அபிப்பிராயங்களை வெளியிட்டுள்ளனர். இதுவரை இஸ்லாத்தின் சத்திய போதனைகளைச் சிலாகித்து ஆயிரக்கணக்கான நேர்மை குணம் படைத்த ஹிந்து கிறிஸ்தவ யூத பாரசீக ஐரோப்பிய அறிஞர்கள் பலர் தத்தம் உயரிய அபிப்பிராயங்களைத் தெரிவித்திருக்கின்றனர். அவைகளிற் பல நமது "ஹிபாஜத்" இதழில் பலதடவைகளில் பிரசுரிக்கப்பெற்றிருக்கிறது. இவ்விதழில் ஐரோப்பிய அமெரிக்க பேராசிரியர்களான விஞ்ஞான சாஸ்திரிகள் இஸ்லாத்தைப்பற்றி கூறியுள்ளவைகளில் சிலவற்றை கீழே தருகின்றேன். அன்பர்கள் ஊன்றி கவனித்து இஸ்லாத்தின் உயரிய தத்துவங்களை உணர்ந்து பிறருக்கும் போதிக்க முன்வருவார்களென்று நம்புகிறேன்.

மிஸ்டர் 'மானீர் பாவுல்' பிரசங்கம்

மிஸ்டர் 'மானீர் பாவுல்' என்பவர் இன்று அமெரிக்க கோடீஸ்வரர்களில் தலைசிறந்து

விளங்குபவர். சகல மதங்களையும் உள்ளூர ஆராய்ந்து பார்ப்பதில் அதிக ஆர்வமுடையவர். சில வருஷங்களுக்கு முன் அமெரிக்காவில் சர்வமத கான்பரன்ஸ் ஒன்று நடைபெற்றது. அம் மகாநாட்டில் மிஸ்டர் 'மானீர்பாவுர்' செய்த பிரசங்கத்தில் குறிப்பிட்டதாவது:—

நான் கிறிஸ்தவ மதத்தின்மீது அளவற்ற பற்றுள்ளவனாயிருப்பினும் அம் மதத்துடன் சம்பந்தம் வைத்துக்கொண்டவனாயிருப்பினும் இம் மகாநாட்டில் இஸ்லாம் மதத்தின் அழகான போதனைகளை எடுத்துரைப்பது மிக்க அவசியமென்று கருதுகின்றேன். எனது அபிப்பிராயத்தில் மாடர்ன் மதம் என்று ஒன்றிருப்பதாயின் அது இஸ்லாம் மதமாகவே இருத்தல் முடியும். நான் பல வருஷங்களாக இஸ்லாமிய சரித்திரங்களை நன்கு கவனித்திருக்கிறேன். எவ்வளவோ இஸ்லாமிய உண்மைச் சரித்திரங்களை நான் படித்துப் பாத்தபின் கீழ்கண்ட அபிப்பிராயத்திற்கு வருகிறேன். இஸ்லாம் வைதீகம் லௌகிகம் (=மதம், அரசியல்) ஆகிய இரண்டும் ஒருங்கே சேர்ந்து அமைந்திருக்கிறது. இஸ்லாம் எங்கு மானிடர்களுக்கு மத விஷயத்தைப் போதிக்கிறதோ அங்கெல்லாம் உலகில் முன்னேற்ற மடைவதற்குரிய வழியையும் காட்டித் தருகிறது. நமது கிறிஸ்தவ மதமோ "நாம் மூலைகளில் குந்தி இருந்து வணங்கவேண்டும், மேலும், உலகத்தை மறந்து விடவேண்டும்' என்று நமக்குப் போதிக்கிறது. ஆனால் இஸ்லாமோ "உலகத்திலேயே இருக்கவேண்டும், இறைவனையும் மறந்து விடுதல் கூடாது" என்று போதிக்கிறது. ஆனால், நான் எனது மதப்போதனைப்படி நடக்கும் பட்சத்தில், ஆச்சிரமங்களுக்கு ஊழியம் புரிவதைவிட வேறு எவ்வித பதவிகளையும் நான் அடைந்திருக்க முடியாது. ஆனால் நான் இஸ்லாமிய போதனையை எனது அனுஷ்டானத்தில் கையாண்டு வந்தேன். நான் இன்றுவரை மதத்தைவிடவுமில்லை உலகத்தையும் (=செல்வங்களையும்) சேகரித்துக் கொண்டேன். இஸ்லாமிய போதனையானது எனக்கு என்னை அறியாமலே ஒருவித உணர்ச்சியையும், முன்னேற்றத்திமீது அவிட்கையையும் உண்டாக்கி விட்டது. இதன் காரணமாகவேதான் நான் இன்று அமெரிக்காவின் கோடீஸ்வரனாகவிருக்கிறேன். நான் எனது தோழர்களிடத்தில் வேண்டிக்கொள்வதென்னவென்றால், அவர்கள் உண்மையிலேயே மனிதர்களுக்குகந்த ஒரு மதத்தைப் பின்பற்ற நாடுவார்களேயாகில், இதர மதங்களையு[...]ருக ஆராய்ந்து பார்க்கவேண்டும். குறி[...] இஸ்லாம் மார்க்கத்தை நன்குணர்ந்து பார்[...] மிக்க அவசியமாகும். ஏனெனில், இந்தமா[...]கம் மானிடர்களுக்கு வைதீகம் லௌகிக ஆகிய இரண்டினையும் போதித்து மானிட முன்னேற்றத்திற்கு வழிகாட்டக் கூடியதாக விருக்கிறது" என்பதே யாகும்.

மிஸ்டர் ராபர்ட் ஸாமூர் அபிப்பிராயம்

ஐரோப்பாவின் பிரபல நூலாசி[...]ன மிஸ்டர் ராபர்ட் சாமூர், தமது நூ[...] குறிப்பிடுவதாவது:—

முஹம்மது நபி அவர்களின் வாழ்க்கை சரிதையை நான் பார்த்தபின், உண்மையிலேயே பிரமிப் படைந்தேன். "காட்டுமிராண்டிகளான ஒரு தேசத்தில் ஒரு மனிதர் பி[...] தமது நாட்டையே திருத்தி அமைத்[...]டார்" என்ற விஷயம் எனது சிற்றறிவில் நு[...]வதற்கு வெகு கஷ்டமாயிருக்கிறது. மு[...]தவர்கள் கடவுளிடமிருந்து நூதனமான [...]தயத்தையும், மூளையையும் வாங்கி வந்திருக்கிறார் என்பதில் எனக்கு சிறிதும் சந்தேகமில்லை. இவர்கள் சிலவருஷங்களுக் குள்ளாக, பல நூற்றாண்டுகள் முயற்சி செய்தாலும் செய்ய முடியாத அத்தனை பெரிய மாறுதலை செய்துவிட்டார்கள். முகம்மதவர்கள் தமது நாட்டினர்களுக்கு மாத்திரம் மனிதத் தன்மையைக் கற்றுக் கொடுக்கவில்லை. ஆனால், ஐரோப்பாவும் அவர்களுக்கு இவ்விஷயத்தில் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுளது. அவர்கள் உலகத்தின் முன் என்றும் அழியாத ஒரு விஞ்ஞான சாஸ்திரத்தை ஸ்தாபித்து வைத்தார்கள். அதில் நின்றும் இன்றைய உலகம் பூராவும் பிரதிபலனை (லாபத்தை) அடைந்து கொண்டிருக்கிறது. ஐரோப்பாவில் இஸ்லாமிய வெற்றி வீரர்கள் இவ்விஞ்ஞான சாஸ்திரத்தை தங்களுடன் கொண்டு வந்தார்கள். இந்த விஞ்ஞான சாஸ்திரம் (அஞ்ஞானத்தில் மூழ்கிக் கிடந்த) ஐரோப்பாவை திருத்தி அமைத்து விட்டது. இதற்குமுன், ஐரோப்பாவானது வெட்கமற்ற, மனிதத் தன்மையற்ற, அனாச்சாரங்கள் நிறைந்த ஓர் நாடாக விருந்தது. முஹம்மது அவர்களின் போதனையானது மானிட வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் பொதிந்ததாகவிருக்கிறது. முஹம்மது அவர்கள், யுத்தம் செய்தல், சமாதானமாக விருத்தல், வியாபாரம்